யாதும் ஊரே யாவரும் கேளிர்

# சங்கத்தமிழ்

குரல் – 02 | வாராந்திர சர்வதேச மின் செய்தித்தாள் | யூன் 01 2021



# சிறப்பு முகாமில் உள்ள ஈழத்தமிழர்கள் கோரிகை முன் வைப்பு தமிழக முதல்வர் திரு. எம்.கே. ஸ்டாலின் அவர்களின் நிலை என்ன?

கொரோனா காலத்திலாவது குடும்பத் தோடு வாழ விடுங்க: சிறப்பு முகாமில் உள்ள இலங்கைத் தமிழர்கள் முதலமைச்சருக்கு கோரிக்கை!

கொரோனா காலத்திலாவது தங்களை குடும்பத்தோடு வாழ வைக்க வேண்டும் என சிறப்பு முகாமில் உள்ள இலங்கை தமிழர்கள் தமிழக முதலமைச்சருக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

திருச்சி மத்திய சிறை வளாகத்தில் உள்ள சிறப்பு முகாமில் பல்வேறு குற்ற வழக்குகளில் தொடர்புள்ளதாக கைது செய்யப்பட்டுள்ள ஈழத் தமிழர்கள் 78 பேர் மற்றும் வங்கதேசம், நைஜீரியா, சூடான், பல்கேரியா நாடுகளைச் சேர்ந்த 104 பேர் தற்போது உள்ளனர். சிறப்பு முகாமில் உள்ள இலங்கைத் தமிழர்களில் பெரும்பான்மையானவர்கள் சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல முயன்றதாக கைது செய்யப்பட்டவர்கள்.

தற்போது கொரோனா தொற்று பரவிவரும் சூழலில், தங்களை விடுதலை செய்ய வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை வைத்துள்ளனர். இது தொடர்பாக அவர்கள் கூறுகையில், “இலங்கையில் நடைபெற்ற போரினால் அகதிகளாக தமிழ்நாட்டுக்கு வந்து 30 ஆண்டுகளுக்கு மேலாக வசிக்கிறோம். பல்வேறு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளோம். எங்களை பொய் வழக்கில் கைது செய்தும், குற்ற வழக்கின் தண்டனைக் காலத்திற்கு மேல் சிறப்பு முகாம் எனும் சிறையில் அடைத்து வைத்துள்ளனர் என்றுதெரிவிக்கின்றனர்.

தங்கள் மீதான வழக்குகளை சட்டப்படி நடத்தி, விடுதலை செய்யக் கோரியும்குடும்பத்தினரோடு சேர்ந்து வாழ அனுமதிக்க வேண்டும் என்று வலியுறுத்தி உண்ணாவிரதப் போராட்டம் தொடங்கி தற்கொலை முயற்சி வரை சிறப்பு முகாமில் அவர்கள் நடத்தியுள்ளனர்.

ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லி சிறப்பு முகாமிலேயே பல ஆண்டுகளாக தடுத்து வைத்துள்ளனர் என்றும் இதனால், தங்களுக்கு கிடைக்க வேண்டிய சட்ட ரீதியிலான உதவியும் மறுக்கப்பட்டு மனித உரிமையும் மீறப்படுவதாக அவர்கள் வேதனையுடன் கூறுகின்றனர்.

தமிழகத்தில் புதிதாக பொறுப்பேற்றுள்ள அரசு தங்களை விடுதலை செய்ய வேண்டும் என்றும் சிறப்பு முகாமில் உள்ள இலங்கை தமிழர்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.

சிறப்பு முகாமில் உள்ள இலங்கைத் தமிழர்கள் 40க்கும் மேற்பட்டவர்கள் கொரோனொ தொற்றுக்கு சிகிச்சை பெற்று, மீண்டும் சிறப்பு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். மாஸ்டர் செல்வம் என்பவர் அரசு மருத்துவமனையில் தொடர் சிகிச்சையில் உள்ளார்.

# தமிழீழம் TAMILEELAM




## தமிழீழ தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து



எமது விடுதலைப் போராட்டத்ததுக்கு கல்விக்கு கவசமாக இருப்பது போல, கல்வியும் எமது போராட்டத்திற்கு காப்பரணாக நிற்கவேண்டும். எமது தேசத்தின் எதிர்காலச் சிற்பிகளாக ஒரு புதிய இளம் பரம்பரை தோற்றங்கொள்ள வேண்டும். ஆற்றல் மிகுந்தவர்களாக, அறிவுஜீவிகளாக தேசப்பற்றாளர்களாக போர்க்கலையில் வல்லுனர்களாக நேர்மையும் கண்ணியமும் மிக்கவர்களாக ஒரு புதிய புரட்சிகரமான பரம்பரை தோன்ற வேண்டும். இந்தப் பரம்பரையே எமது தேசத்தின் நிர்மாணிகளாக நிர்வாகிகளாக ஆட்சியாளர்களாக உருப்பெறவேண்டும்.



தமிழீழ விடுதலைப் போரில் வீரச்சாவடைந்த அனைதுப் போராளிகளுக்கு எமது வீர வணக்கத்தையும், சிங்கள, இந்தியப்படைகளால் அநியாயமாகப் படுகொலை செய்யப் பட்ட அனைத்து தமிழீழ மக்களுக்கும் எமது அமைதி வணக்கத்தையும் செலுத்திக் கொள்கிறோம். -சங்கத்தமிழ் –

# சங்கத்தமிழ்

## தொடர்புகளுக்கு

**தொலைபோசி** (TP)

**437 345 4203**

**மின்னஞ்சல்** (Email)

**sangathamilcanada@gmail.com**

**முகநூல்** (Facebook)

**Sangathamil Canada**

அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சி யும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பராதா் அல்லது எழுத்தாளா்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.




# பிரிகேடியர் பால்ராஜ்

விடுதலைப்புலிகளின் போரியல் வரலாற்றில்
மகுடம் சேர்த்த, உலகப் போரியல் வரலாற்றில் தனியிடம் பெற்ற,
தென்னாசியாவின் சிறந்த தரையிறக்கச் சண்டையாகப் பதியப்படக்கூடிய வகையில்
தனித்தன்மை வாய்ந்ததாகக் கருதப்படும் இத்தாவில் பெட்டிச்சமரை வழிநடாத்திய
தலைமத் தளபதி பிரிகேடியர் பால்ராஜ்
அவர்களின் 13 ஆம் ஆண்டு நினைவு நாள் (20-05.2008).

அங்கே கூடியிருந்த சில இளைஞர்கள் மட்டும் சுறுசுறுப்பாக அதேநேரம் பதை பதைப்பாக நின்றனர்.

விடுதலைப் போராளிகளாகத் தம்மை இணைத்திருந்த அந்த இளைஞர்கள் இராணுவப் பயிற்சி பெறுவதற்காகத் தமிழ்நாடு நோக்கிய பயணத்திற்குத் தயாராகி நின்றனர்.

லெப். காண்டீபன் தலைமையில் அவர்கள் புறப்பட வேண்டும்.

செம்மலையிலிருந்து புறப்படும் அவர்கள் கடற்கரையை அடைந்து அங்கிருந்து படகுயெடுத்து தமிழ்நாட்டைச் சென்றடைய வேண்டும்.

நம்பிக்கையோடு தொடங்கிய பயணம் இறுதிவரை நல்லபடியாக முடிய வேண்டும். உழவுப் பொறியொன்றில் எல்லோரும் ஏறினர். மகிழ்ச்சியோடு அந்தச் செம்மண் வீதிகளைக் கடந்து விரைந்து கொண்டிருந்தனர். தமது விடுதலைக்கான பயணத்தில்.

பற்றைக்காடுகளுக்குள் மறைந்து கிடந்த சிங்கள இராணுவப் பேய்கள் தாக்கத் தொடங்கினர். எதிர்பாராத ஒரு பதுங்கித் தாக்குதல்.

சுதாகரிக்கவோ... நிதானிக்கவோ முடியாத அளவுக்கு கடுமையான தாக்குதல். பெரும் எதிர்பார்க்கையோடு பயணித்த அந்தப் புதிய போராளிகளை எதிரி ஒவ்வொருவராகச் சரித்து வீழ்த்தினான். விடுதலைப் பயணத்தின் தொடக்கப் புள்ளியிலேயே சந்தித்த பெரும் இடர். அந்தத் தாக்குதலில் தப்பிப்பழைப்பதென்பதே பெரும் கெட்டித்தனமான அதிஸ்டவசமான செயல்.

வீழ்ந்தவர்கள் பிணங்களாகச் சரிய உயிரோடு அதிலிருந்து தப்பியவர்கள இரண்டே இரண்டு பேர்தான்.

அந்த இரண்டு பேரில் ஒருவர் பிரிகேடியர் பால்ராஜ்.



பயிற்சிக்காக வண்டியேற வேண்டியவர் மருத்துவச்

அதுவே அவரின் முதல் துயராகவும். முதற்களமாகவும் அமைந்தது.

**சாவுவலயம்**



**மேஜர் பசீலன்**

வன்னியின் சண்டைக்காரர்களில் முதன்மையானவர்களில் ஒருவர். பசீலன் அண்ணரின் சண்டைகள்

வித்தியாசமானவை துணிகரமானவை. எதிரிகளின்

தாக்குதலுக்கு திட்டமிடப்பட்டது.

இடம்பார்த்து வேவு பார்த்து தாக்குதலுக்கு நாள் குறிக்கப்பட்டு அணி ஒழுங்குபடுத்தப்பட்டது. மேஜர் பசீலன்

தாக்குதல் திட்டத்தை விளங்கப்படுத்த விபரங்களை உள்வாங்கியபடி அணி உரிய இடத்திற்கு நகரத் தொடங்கியது.

எதிரி நகரும் வழிபார்த்து கிளைமோரைப் பொருத்தி விட்டு போராளிகள் நிலையெடுக்கும் வேளை பசீலன் அண்ணர் தாக்குதல் திட்டத்தை மாற்றினார்.

போராளிகள் மீள் ஒழுங்குபடுத்தப்பட்டனர். திருத்தம் செய்யப்பட்ட தாக்குதல் திட்டத்தை பசீலன் அண்ணர் தாக்குதல் திட்டத்தை மாற்றினார்.

எதிரி நகரும் பாதையை நோக்கி கிளைமோரைப் பொருத்தும் அதேவேளை வெடிக்கும் கிளைமோரின் குண்டுச் சிதறல்கள் எந்தத் திசை நோக்கி தாக்குமோ அதே நேர்த்திசையில் போராளிகள் நிலையெடுக்க வேண்டும் ஒரு திகிலூட்டும் திட்டத்தை மேஜர் பசீலன் விளங்கப்படுத்தினார்.

கிளைமோரின் பின்புறமாக் அல்லது அதன் இடது மற்றும் வலது புறங்களில் போராளிகளை நிலையெடுக்கச் செய்வதே எப்போதும் கைக்கொள்ளும் இராணுவ வழமை. ஆனால் இந்த இராணுவ வழமையை மாற்றியமைத்து எதிரிமீது ஒரு அச்சமூட்டும் தாக்குதலைத் தொடுக்க பசீலன் அண்ணர் விரும்பினார்.

கிளைமோரின் தாக்குதலிருந்து தப்பும் எதிரிகள கிளைமோர் வெடிக்கும் திசைக்கு எதிர்ப்புறம் போராளிகள் இல்லாத தமக்கான பாதுகாப்பான பகுதியென எண்ண நிலையெடுப்பர். அந்தப் பகுதியை தாக்குதல் வலயமாகுவதே மேஜர் பசீலனின் நோக்கமாக இருந்து.

எதிரி எதை நினைப்பானோ அதற்குமாறான ஒரு தாக்குதல்

**எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன. தங்களது ஆக்கம் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.**

திட்டம் தயாரானது. காரணம் தப்பினால் சாவு என்கிற சாவுத்திட்டம் அது. திட்டத்தில் ஏற்படும் சிறு சறுகல் கூட தாக்குதலுக்குள்ளாக வேண்டிய எதிரிகளுக்குப் பதிலாக தாக்குதலை மேற்கொள்ளும் எமது போராளிகளே தாக்கப்படக்கூடிய ஆபத்து நிறைந்த திட்டம்.

துணிந்தவன் வெல்வான் என்பது பசீலன் அண்ணரின் கணிப்பு. அந்த தாக்குதல் திட்டத்தை நிறைவேற்றுபவர்களுக்கு அசாத்திய துணிச்சலும் அதிக தன்னம்பிக்கையும் - பிசகாது செய்துமுடிக்கும் இராணுவ ஆற்றலும் வேண்டும்.

யாரைத் தேர்ந்தெடுக்கலாம்? பசீலன் அண்ணர் அந்தத் தாக்குதலை நிறைவேற்றும் பொறுப்புக்கு ஒருவரைத் தேர்ந்தெடுத்தார். அது வேறுயாருமல்ல எங்கள் தளபதி பால்ராஜ். தாக்குதல் வலயத்திற்குள்ளிருந்த சிறுபள்ளத்தைத் தமக்குக் காப்பாகப் பயன்படுத்தி, பசீலன் அண்ணர் நினைத்தது போலவே எதிரிகள் மீதான அந்தத் தாக்குதலை தளபதி பால்ராஜ் தலைமையிலான போராளிகள் வெற்றிகரமாகச் செய்து முடித்தனர் அந்தக் கொலை வலயத்தில் அசாத்திய துணிச்சலுடன்.

**சூட்சமம்**

இளம் போராளிகளுக்கான பயிற்சிக் கல்லூரி அது. பல்வேறு நிலைப்பட்ட போராளிகளும் இருந்தனர்.

களம் என்பது சாதாரண மானதல்ல சாவோடு விளையாடி மண்ணையும் மக்களையும் காப்பாற்றுவதற்காக் வெற்றியைச் சுவீகரிக்க வேண்டிய வீரத்திடல். அந்த வீரத்திடலில் எதிரியோடு விளையாடி அனுபவம் பெற்ற எமது பல தளபதிகள் நிறைந்த அனுபவங்களையும், போர்ப்பட்டறிவுகளையும் கொண்டிருந்தனர்.

இவ்வாறு பலமுறை வெற்றியோடு விளையாடிய தளபதிகளுள் ஒருவர் தளபதி பால்ராஜ். தன்னுடைய போர்க்கள அனுபவங்களை இந்த இளம் வீரர்களுக்கு புகட்டினார். அவர்கள் முன்னிலையில் பல விடயங்கள் குறித்தும் பேசினார்.

எதிரிகளின் நோக்கம் - போர்க்களத்தின் எதிர்பாரா திருணங்கள் - சண்டையில் எதிரிகளை வீழ்த்தும் வியூகம் என எல்லாவற்றையும் எல்லோருக்கும் கற்றுக்கொடுத்தார். தான் களத்தில் கற்றவற்றையும் -



சந்தித்தவற்றையும் பகிர்ந்து கொண்டார். அங்கிருந்த இளம் வீரர்களுக்கு இந்த வீரனைப் பார்க்கவும் - அவர் சொல்வதைக் கேட்கவும் வியப்பாக இருந்தது அதிக விரப்பமாகவும் இருந்தது.

தளபதி பால்ராஜ் அந்த இளம் போராளிகளுக்கு சொல்லிக் கொடுத்து முடிய அவர்கள் தமக்கிருந்த சந்தேகங்களை - விருப்பங்களை தளபதியிடமிருந்து அறிந்துகொள்ள விரும்பினர். அப்போது ஒரு இளம் வீரன் தளபதி பால்ராஜ் யிடம் கேட்டான் உங்களுக்குச் சண்டையில் பயம் வருவதில்லையா?

போர் விரர்களுக்கு இருக்கக்கூடாத அம்சம் பயத்தை நீக்கி வீரத்தைப் பெற அவர்கள் கேட்டுணர வேண்டிய ஆரம்பப் பாடம். அதை மாவீரன் பால்ராஜயிடமிருந்து கற்றுக்கொள்ள அந்த இளம்வீரன் விரும்பினான்.

தளபதி பால்ராஜ் அந்த இளம் வீரனை நோக்கி கூறினார். “எனக்குப் பயம் வருவதில்லை…அது போல உங்களுக்கும் பயம் வரக்கூடாது” அப்போது பயத்தை வென்று துணிவைப் பெறும் மந்திரத்தின் சூட்சுமத்தை அவிழ்க்கத்தொடங்கினார் தளபதி பால்ராஜ்.

நீங்கள் முதலில் எந்தவேளையிலும் எந்த ஆபத்தையும் எதிர்கொள்ளக்கூடியவாறு முழுத் தயார்நிலையில் இருக்கப் பழக வேண்டும்.

நான் காடாக இருந்தாலும் சரி… பெரும் வெளியாக இருந்தாலும் சரி… எந்தக் களச் சூழலில் இருக்கிறேனா அந்தக் களச்சூழலில் எதிரி திடீரென எதிர்ப்பட்டால் அவனை எப்படி எதிர்கொள்ளலாம் எனச் சிந்திப்பேன்.

சிந்திப்பதோடு மட்டும் நின்று விடாது அத்தகையதொரு எதிர்பாராத தாக்குதலை தடுக்கக்கூடியவாறு எனது மனதிற்குள் ஒரு கற்பனையான தாக்குதல் திட்டம் ஒன்றை ஒத்திகை செய்து…பார்ப்பேன். என்னை நான் எந்த நெருக்கடி நிலைக்கும் ஏற்ற வகையில் தயார் நிலையில் வைத்திருப்பேன்…

அதன் எதிரி எப்படி வந்தாலும்… பயமின்றி பதட்டமின்றி எந்த என்னால் சூழலிலும் சிறப்பாகச் செயற்படமுடியும்.

இதைப் போன்று நீங்களும் செய்யுங்கள் என்றார் இளம் வீரர்களை நோக்கி அந்தப் பயமறியாத் தளபதி.



**பெருமை**

சிங்களப்படைகள் தமது முழுப்பலத்தையும்… வளத்தையும் ஒன்று திரட்டி யாழ்ப்பாணம் மீது படையெடுக்க தமிழர் படையை வன்னியை நோக்கி பின்னகர்த்தினார் தலைவர். யாழ்ப்பாணத்தைப் புலிகள் இழந்துபோனதால போராடும் திறனை அவர்கள் இழந்து போனார்களென் எக்களாமிட்டது சிங்களம்.

யாழ்ப்பாணத்தைத் தொடர்ந்து வன்னி மீது போர் தொடுக்க தன்னைத் தயார்ப்படுத்தியது சிங்களம்.

அமைதியாய் - ஆர்ப்பாட்டம் ஏதுமின்றி உள்ளே குமுறும் எரிமலை போல் தருணம் எதிர்பார்த்துக் காத்திருந்தார் தலைவர்.

1996 யூலை 18

நந்திக் கடலோரம் அமைந்திருந்த முல்லைத்தளத்தை வீழ்த்த தலைவர் முடிவெடுத்தார். தளத்தை அழிக்கும் முழுப் பொறுப்பையும் தளபதி பால்ராஜ்யிடம் ஒப்படைத்தார். புலிகளின் அசுர அடி, தளம் ஆட்டம் கண்டு வீழ்ந்துபோனது.

ஆயிரத்து இருநூற்றிற்கும் மேற்பட்ட சிங்களப் படைகளை அழித்து தமிழர் படை எதிரியிடமிருந்து அந்த தளத்தையும் அங்கிருந்த ஆட்லறிகளையும் ஆயுத தளபாடங்களையும் கைப்பற்றியது.

போராட்டச் சக்கரம் புதையுண்டு போனதாய் புலம்பியவர் களெல்லாம் வாயடைத்துப் போனார்கள்.

வெற்றிப் பெருமிதத்தோடு தலைவரின் தளம் நோக்கி விரைந்தார் தளபதி பால்ராஜ். தலைவர் நினைத்ததை நினைத்தபடியே களத்தில் செய்துவிட்டு தளபதி பால்ராஜ் வர தலைவர் மகிழ்ச்சியுடன் தளபதியுடன் பால்ராஜ்யின் ஒரு கரத்தைப் பற்றிப் பாராட்டினார்.

2000 மார்ச் 26

மூன்றாம் கட்ட ஈழப்போரின் போக்குத் திசையை எதிரியின் பிடியிலிருந்து புலிகளின் பிடிக்குள் கொண்டுவந்து கொண்டிருந்தார் தலைவர்.
இடிமுழக்கம்… சூரியகதிர்… சத்ஜெய… எடிபல… ஜெயசிக்குறு என அடுத்தடுத்துப் படையெடுத்து புலிகளின் கதை முடிக்க முயன்றவர்களின் கதை முடிக்கும் ஓயாத அலைகள் படை நடவடிக்கையை ஆரம்பித்திருந்தார் தலைவர்.

வன்னியின் தென்முனை நோக்கிப்படை நடத்திய தலைவர் சடாரென திரும்பிய புயல் போல் வன்னியின் வட திசையில் போர்ப்புயலை வீசச் செய்தார். ஆனையிறவைச் சூழவிருந்த படைமுகாம்கள் ஒவ்வொன்றாய் வீழ களம் சூடு பிடிக்கத் தொடங்கியது.

திட்டம் புலிகளுக்கு மட்டுமேயுரிய தனித்துவமான திட்டம். அகன்று விரிந்து கிடக்கும் பகைவனின் முற்றத்தில் புலிகள் கூடாரமடித்து எதிரிகளை வேட்டையாட வேண்டும். சிங்க வேட்டைக்குத் தலைவர் தேர்ந்தெடுத்த இடம் இத்தாவில். அதை அரங்கேற்ற அவர் தேர்ந்தெடுத்த தளபதி பால்ராஜ். முப்பத்து நான்கு நாட்கள, இந்தாவில் மட்டுமல்ல தளபதி பால்ராஜ்யும்…போராளிகளும் நெருப்பில் குளித்து நிமிர்ந்தனர்.

முடிவு இனிமேல் எங்களால் முடியாது என்ற பகைவன் ஆனையிறவிலிருந்து தமது சகாக்களையும் ஆனையிறவை நோக்கிப் பலாலியிலிருந்து அனுப்பிய தனது படைகளையும் பின்னிழுக்கச் சிங்களச் சிங்கங்கள் குந்தியிருந்த அந்தப் பெருங்கோட்டை உக்கி உப்பு வெளிக்குள் உதிர்ந்து போனது.

அதன் ஆணிவேரை ஆட்டங்காணச் செய்த அந்த முப்பத்து நான்கு நாள் இத்தாவில் சமரை பால்ராஜ் வென்று ஏ-9 சாலையால் தலைவரின் தளம் விரைய தலைவர் மீண்டும் கைகொடுத்தார். அந்தத் தளபதியைப் பாராட்ட ஆனால், ஒரு கையை அல்ல இரு கைகளையும் சேர்த்து.

பகைவன் கூட பாராட்டு வகையில் படை நடாத்திய அந்தப் பெருந்தளபதி… எத்தனையோ சண்டைகளை… சமர்களை… வென்ற வீரன்.

எதிரிகளோடு தனித்துச் சண்டை செய்து… குழுவாகச் சண்டை செய்து… பெரும் படையாகச் சண்டை செய்து… அந்தப் பெரும் படையையே வழிநடாத்தும் பெருந் தளபதியாய் உயர்ந்து எங்கள் புருவங்களை உயரச் செய்த அந்த உன்னத தளபதி முடியாது என்ற களத்தில் கூட தன்னால் முடியும் எனச் சாத்தித்துக் காட்டிய அந்தத் தளபதி.

பெருமையோடு தான் பெற்ற இந்த இரண்டு பெரும் பாராட்டுக்களையும் மனமிளகி மகிழ்ச்சியோடு தோழர்களிடம் நினைவு கூறுவராம்.

**சமயோசிதம்**

தளபதி பால்ராஜ் தலைமையில் குடாரப்பில் தரையிறங்கிய புலி வீரர்களும் வீராங்கனைகளும் எதிரியின் முற்றமான இத்தாவிலில் - பெட்டிகட்டி சடு…குடு… ஆடினார்கள்.

திகைத்துப்போன பகைவன் இருந்தவர்களையும் - கிடந்த வைகளையும் வாரிச்சுருட்டிக் கொண்டு புலிகளோடு மூர்க்கமாக மோதத் தொடங்கினான். தாக்குதலின் கடுமை இத்தாவில் சமர் சரித்திரம் மறவாத் சமராக மாறியது.

பல்லாயிரக்கணக்கான எதிரிகளுக்கு எதிராக சுமார் ஆயிரத்து இருநூறு போராளிகள் மட்டுமே எதிர்ச் சமராடினர்.

பகைவனின் இரும்புக்கோட்டையைச் சரிக்க தலைவரின்

எண்ணத்தில் உதிர்த்த அற்புதமான போரியல் திட்டம்.



அதைத் தளத்தில் அரங்கேற்றும் நாயகன் எங்கள் பிரிகேடியர் பால்ராஜ். தலைவரின் நம்பிக்கையான தெரிவு எப்போதும் தலைவர் எதிரிகளை கலங்கடிக்க எய்யும் சக்திமிக்க அம்பு.

உள்ளே பால்ராஜ் நிக்குதாம் அறிந்து கொண்ட எதிரி எரிச்சலோடும் மூர்க்கத்தோடும் மோதினான்.

எப்படியாவது... எங்காவது ஒரு மூலையில் சிறு உடைப்பை ஏற்படுத்த முடியாதா என எதிரி திணறினான்.

படையணிகளை மாற்றி... படையதிகாரிகளை மாற்றி... மூர்க்கத்தோடு முட்டிமோதிய போதும் அவனால் முன்னேற முடியாமற் போயிற்று.

உள்ளே மோதிக் கொண்டிருக்கும் போராளிகள் குறைந்த எண்ணிக்கையாலானவர்கள் அவர்கள் வசமிருந்த படைக்கலங்களும் குறைந்த எண்ணிக்கையிலானவை.

தாக்குதல் களம் எதிரியின் முற்றம் போராளிகள் நினைத் தவுடனெந்தப் பற்றாக்குறைகளையும் தேவைகளையும்... நிவர்த்தி செய்துவிட முடியாது.

அதற்கு எதிரி களத்தில் வாய்ப்பளிக்கப் போவதுமில்லை. இப்படித்தான் களத்தில் எதிரி மோதிக்களைத்த நிலையில்



ஒருநாள் நேரடி மோதுகையைத் தவிர்த்து அகோரமான எறிகணைத் தாக்குதலைத் தொடுத்துக் கொண்டிருந்தனர்.

அந்த முப்பத்துநான்கு நாள் சமரின் ஒருநாள் போராளிகள் நிலைகொண்டிருந்த அந்தக் களமுனை முழுவதையும் எறிகணைகள் துடைத்தழித்துக் கொண்டிருந்தன.

அப்போது எதிரி ஏவித்தொலைத்த அந்தப் பல்லாயிரக் கணக்கான எறிகனைகளில் ஒன்றோ சிலவோ அங்கே தாக்குதலுக்காகக் களஞ்சியப்படுத்தியிருந்த போராளிகளின் ஆயுதக்களஞ்சியம் மீது வீழ்ந்து வெடிக்கத் தொடங்கியது திருவிழா!

உள்ளேயிருந்த அத்தனை வெடிபொருட்களும் கடாம்... புடாம்... டமால்... எனப் பெரும் வெடியோசையோடு தொடர் குண்டோசையாக் வெடித்துச் சிதறியது.

உள்ளே என்ன நடக்கிறது என்பது எவருக்குமே புரியவில்லை. எறிகணைகளை ஏவிக்கொண்டிருந்த எதிரியும் கூடக் குழம்பிப் போனான்.

குண்டு மழை ஓய்ந்தது போல் அந்தக் களமுனை சற்று அமைதியுற அங்கு நிலைமையின் விபரீதம் கண்முன்னே விரிந்து கிடந்தது.

உள்ளே இருப்பவர்களின் இருப்பு இந்த வெடிபொருட் களின் இருப்பிலும் தான் இருக்கிறது. அவை எதிரிகளை அழிக்காமலே அழிந்து போகுமானால் நிலைமையைக் கற்பனை செய்யவே கடினமாக இருக்கும். ஆனால் அத்தகையதொரு நிலைமைதான் அந்தக் களத்தில் தளபதி பால்ராஜின் முன் ஏற்பட்டுவிட்டது.

எத்தகைய படைகளையும்... எந்த உறுதி மிக்கத் தளபதிகளையும்... படையதிகாரிகளையும் குழம்பச் செய்து விடக்கூடிய அழிவு.

களமுனையில் நின்றவர்கள் ஏதொ சிக்கல் ஏற்பட்டுவிட்டது என்பதை உணர்ந்து பதட்டத்தோடு தொலைத் தொடர்புக் கருவியில் தளபதி பால்ராஜ்யை அழைத்தனர்.

லீமா...லீமா...
என்ன மாதிரி...?
ஏதம் சிக்கலோ...?

அறிந்து கொள்ளும் அவசரம் எல்லோருக்கும் நிதானமாக் எந்தக் குழப்பமுமற்று அழைத்த எல்லாக் குரல்களுக்கும் லீமாவின் பதில் வந்தது தெளிவாக. அது ஒண்டுமில்லை நாளைக்கு நாங்கள் செய்யப்போகும் 'ஒழுங்குக்கு' இண்டைக்கு ஒத்திகை நடக்குது. என தொலைத் தொடர்வுக்கருவியில் ஒலித்தது. உறுதிகுயைாத ஒரு தளபதியின் சமயோசிதக் குரலாக.

**சுனாமி...!**

2004 ஆம் ஆண்டு காலப்பகுதி... தளபதி பால்ராஜ் அப்போது தென்தமிழீழத்தின் வாகரையில் நின்றார். வடதமிழீழத்தின் அனேகமான போர்க்களங்களில் நடமாடிய அந்தத் தளபதி இப்போது தென்தமிழீழத்தில்...

அது ஒரு அமைதிக்காலம் போர் ஓய்ந்திருக்க அந்தத் தளபதியும் ஓய்வாக இருந்தான். அழகான கடற் கரையோரம்... அழகூட்டும் ஊர்மனை... கல... கலவெனச் சிரிக்கும் ஏதமறியாச் சனங்களின் வீடுகள் என எல்லா இடமும அந்தத் தளபதி பயணித்தான்.

வாகரையின் கடல்மணல் தொடும் அந்தக் கடற்கரை யோரம் தென்னைமரக் கூடலுக்குள் தளபதி பால்ராஜின் பாசறை இரந்தது. 2006 டிசம்பர் 26 விடிகாலை, சத்தம் சந்தடி ஏதுமின்றி இயற்கை மகள் சீறிச் சினக்க கரையோர மக்கள் தண்ணீருக்குள, கண்ணீரோடு தவித்தனர். தென்னாசியாவின் கரையோரம் எங்கும் மனித உயிர்கள் மண்மேடாய் குவிந்தன. எல்லோரும் அழுதார்கள்... ஏதேனும் ஒரு அசுமாத்தம் தெரிந்திருந்தால் கூட ஓடிப் பிழைத்திருப்போமே என குமுறிக் குழறினர்.

இயற்கை என் எங்களை எச்சரிக்கவில்லை கடலைச் சபித்து மண்ணளிளித் தூற்றினர். சின்ன எச்சரிக்கை எங்க ளுக்காக் எங்கள் மீது பரிவுகொண்டு எவரேனும் எங்களை எச்சரித்திருக் கூடாதா? அதங்கத்தால் ஏங்கினர்.

இயற்கையின் விபரீதத்தை உணரமுடியாமற் போனதா அல்லது இயற்கையின் எச்சரிக்கையை உணரத் தவறினோமா? எவருக்கும் விடை தெரியாத அந்த நாளில் குமுறி எழுந்த அந்தச் சுனாமி அலை கடலைவிட்டுத் தரைக்குத் தாவியபோது கரையோர மக்களுக்கு விபரீதத்தின் விளைவு புரியவில்லைத்தான்.

நின்று... நிதானித்து... சுதாகரிக்க எந்த அவகாசமும் எவருக்கும் இருக்கவில்லைத்தான். வாகரையில் கரை யோரத்தை நோக்கி மலை போல சீறிவந்த கடலலை சூழ்ந்துகொள்ள அங்கிருந்த தளபதி பால்ராஜின் பாசறையையும் கடல் நீர் விழுங்கத் தொடங்கியது.



இந்தக் கடல்நீர் வெளியேற்றம் வழமைக்கு மாறானது ஆபத்தானது புரிந்து கொண்ட தளபதி பால்ராஜ் இயற்கை விளைவித்த அந்த ஆபத்திற்கு மத்தியிலும் ஒரு களத்தின் நிடுவே நின்று செயற்படும் வீரனைப் போல் துரிதமாகத் துணிவோடு செயற்பட்டார்.



கடல்நீர் காலளவு... கையளவு தாண்டி கழுத்தளவு வந்துவிட அந்த முகாமிலிருந்த ஆயுதங்களையும் வெடிவொருட்களையும் நீரிழுத்துப் போகாமல் இருக்கக தளபதி பால்ராஜ் பெரும் போராட்டத்தையே நடாத்த வேண்டியிருந்தது.

அங்கிருந்த கனரக மோட்டரொன்றைக் கயிற்றில் இணைத்து தென்னை மரத்தோடு கட்டியதோடு, ஏனைய போராளிகளை ஏவி இயக்கத்தின் உடமைகளையும் தமிழ்மக்களின் பாதுகாப்புக் கேடயங்களையும் காப்பத்தில் முன்னின்றான் அந்தத் தளபதி.

சீறியெழுந்து சுழன்றடித்துக் கொண்டிருந்த அந்த அலையின் கொடூரப் பிடியின் நடுவெ நின்றுகொண்டும் தன்னுயிரைப் பாதுகாக்க வேண்டுமெனக் கொஞ்சமேனும் நினையாத அந்தத் தளபதி. ஆபத்திற்கு மத்தியிலும் அந்த முகாமிலிருந்த ஒரு துப்பாக்கியை கையிலெடுத்து வானை நோக்கி ரவைக்கூடிலிருந்த அத்தனை துப்பாக்கி ரவைகளும் தீரும் வரை சுட்டுத் தீர்த்தாராம்.

துப்பாக்கி ரவையின் சத்தத்தையும் அலையின் பேரிரைச்சலையும் கேட்டுச் சனங்கள் ஏதொ ஆபத்து வருகிறதென எச்சரிக்கையடைந்து பாதுகாப்பான இடங்களுக்கு ஓடித்தப்பட்டும். சனங்களின் மீது அன்பு கொண்ட எங்கள் தளபதி...

**நம்பிக்கை...!**

"சிங்கமுகச்" சிலந்தி போல் ஆனையிறவுப் படைத்தளம் தனது பாதுகாப்பு வலைப் பின்னலை இறுக்கமாகப் பின்னி குடாநாட்டின் தொண்டைக்குழிக்குள் விரிந்து கிடந்தது. ஆயிரக்கணக்கில் போராளிகளை விதையாக்கிய பின்னும் அந்தப் படைத்தளம் வீழாது வீங்கிப் பெருத் திருந்தது.

ஆனையிறவுச் சிலந்தியின் ஒவ்வொரு பாதுகாப்பு வலைப் பின்னலையும் அது அகல விரித்திருந்த அதன் ஒவ்வொரு கால்களையும் அறுத்தெறிந்து பிணமாக்கத் தலைவர் முடிவெடுத்தார்.

ஒரு பகற்பொழுது பரந்தனில் தொடங்கிய சண்டை விறுவிறுவென உமையாள்புரம் வரை அகன்று நின்ற ஆனையிறவின் கால்களையும் மறுபுறம் கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி, புல்லாவெளிவரை நீண்டு கிடந்த

கால்களையும் அறுத்தெறிய ஆனையிறவு ஒடுங்கிப் போனது. புலிகளுக்கேயுரிய திகிலூட்டும் ஒரு அதிரடி முயற்சியன் மூலம் ஆனையிறவை அடியோடு வீழ்த்துவவே தலைவரின் திட்டம். குடாரப்பில் தரை யிறங்கி இத்தாவிலில் உறுதியாக நின்று கொண்டு ஆனையிறவின் கழுத்தை நெரிக்க வேண்டும்.

திட்டத்தை நிறைவேற்றும் அதிபதியாக் பால்ராஜ்யை தேர்ந்தெடுத்தார் தலைவர். தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் மிகப் பெரும் தரையிறக்க நடவடிக்கை தரைப்புலிகளும்... கடற்புலிகளும் இணைந்து மேற்கொள்ளப் போகும் கூட்டு நடவடிக்கை.

எதிரியின் பயணப் பாதையில் சூறாவளியென சுழன்றடிக்கப்போகும் போராளிகளுக்கு நம்பிக்கையூட்டித் தலைவர் அனுப்பிவிட வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு கடற்கரையோரம் போராளிகள் ஒன்றுசேர்ந்தனர் ஒரு பொரும் வரலாற்றுப் பயணம் இங்கிருந்துதான் ஆரம்பிக்கப்போகின்றது.

வெயில் பளீரெனச் சுட்டெரிக்கும் ஒரு பகற்பொழுது அந்தக் கடற்கரையோரம் தரையிறக்கத் தளபதி பால்ராஜ்யும், கடற்படைத் தளபதி சூசையும் ஒன்றாக அமர்ந்திருந்தனர். வந்திருந்த உணவுப் பொதி யொன்றைப் பிரித்துச் சாப்பிடத் தொடங்க தளபதி சூசை மெதுவாக உரையாடலை ஆரம்பித்தார்.

அக்காலம் மிகவும் நெருக்கடியான ஒரு காலகட்டம். இயக்கம் ஒரு பெரும் தொடர்ச்சியாக போருக்கு முகம் கொடுத்து வந்ததால் வளப் பற்றாக்குறைகளைப் பெரியளவில் எதிர்கொண்டபடியிருந்தது. போராயுதங்களுக்கும் போரைப் பின்னின்று இயக்கும் பல அடிப்படைப் பொருட்களுக்கும் கூட பெரும் தட்டுப்பாடு.

இந்த நிலையில் கடற்புலிகளைப் பொறுத்த வரையில் தரையிறங்கப் போகும் ஆயிரக்கணக்கான போராளி களையும் அவர்கள் கொண்ட செல்லும் ஆயதத் தளபாடத் தொகுதிகளையும் உள்ளே தரையிறக்குவதென்பது இமாலய சாதனை.

அதற்காக கடற்புலிகளின் கையிருப்பிலிருந்த பெருந்தொகை எரிபொருட்களையும் படகுத் தொகுதி களையும் அவர்கள் செலவளிக்க வேண்டியிரந்தது.

இந்த நிலையில் கடற்புலிகளின் வசம் குடாரப்பில் தரையிறக்கப்பட வேண்டிய தளபதி பால்ராஜ் தலைமையிலான ஆயிரத்து இருநூறு போராளிகளையும், அவர்களின் ஆயதத் தளபாடங்களையும் ஏற்றிச் செல்லக்கூடிய அளவு எரிபொருள் மட்டுமே தளபதி சூசையின் கையிருப்பில் இருந்தது.

சண்டை ஏதாவது சிக்கலாகி நிலைமை நெருக்கடிக் குள்ளாகுமிடத்து அவ்வளவு தொகை போராளிகளையும், ஆயுத தளபாடங்களையும் மீளவும் தளம் திருப்ப வேண்டும். ஆனால் அதற்கு தேவையான எரிபொருள் கையிருப்பில் இல்லை.

நிலைமையின் தன்மையை கடற்படைத்தளபதி தளபதி பால்ராஜ்யிற்கு சங்கடத்தேடு உரைக்க ஏற்கெனவெ நிலைமையை நன்கு அறிந்திருந்த அந்தத் தளபதி தனது இதழ்களில் தவழ்ந்த மெல்லிய புன்னகையோடு கண்களில் நம்பிக்கைத் தெறிக்க தளபதி சூசையை நோக்கிக் கூறினாராம்.

“என்னை உள்ள இறக்கி விட்டாக்காணும்... நான் தரையால வருவன்” என்று.

**கைதி...!**



1983க்கும் 1984க்கும் இடைப்பட்ட காலம். வன்னியில் புலிகள் இயக்கம் வேர்விட்டத் தொடங்கியிருந்த வேளையது. பால்ராஜ் அதிகம் அறிப்படாத ஒரு இளைஞனாக இருந்த நாட்கள்...

அதாவது போராட்டத்தில் அவர் தன்னை முழுமையாக இணைத்துக்கொள்ளாத காலம். ஆதரவாளனாக... பகுதி நேரப் போராளியாக அவர் இயங்கிய கொண்டிருந்தார்.

ஒருநாள்...இயக்க வேலையாக தண்ணீரூற்று... முள்ளியவளையென அலைந்து திரிந்து விட்டு மதிவண்டியில் முல்லைத்தீவு நகர் வழியாக பயணித் துக்கொண்டிருக்க முல்லைத்தீவு இராணுவ முகாமிலி ருந்து சிறீலங்கா இராணுவத்தினர் இளைஞனாக இருந்த தளபதி பால்ராஜ்யை இடைமறித்தனர்.

அப்பாவி இளைஞனாக காட்டிக்கொண்ட போதும் அவரைச் சிங்களப் படைகள் கைது செய்தனர்.

தளபதி பால்ராஜ்யை முல்லைத்தீவு முகாமில் 03 நாட்கள் சிறை வைக்கப்பட்டார்.

இவர் அங்கிருந்த அந்த மூன்று நாட்களும் சிறீலங்காப் படையினரும் பொறுப்பதிகாரிகளும் அவரை மிரட்டியும் வெருட்டியும் பல்வேறு உபதேசங்களைச் செய்தனர்.

தளபதி பால்ராஜ்யைப் புலிகள் இயக்கத்தின் ஆதரவாளன் என்றோ...அல்லது பகுதிநேரப் போராளியென்றோ அடையாளம் காணாத சிங்களப்படைகள். சின்னப்பெடியள் தேவையற்ற விடயங்களில் ஈடுபடக்கூடாது என போராட்ட உணர்வை மழுங்கடிக்கும் கருத்துக்களை விதைக்க விளைந்தனர்.

தளபதி பால்ராஜ் எல்லாம் அறிந்தும் அறியாதது போல மௌனம் காக்க சிங்களப் படைகள் அவரை விடுவித்தது. பின்னர் தளபதி பால்ராஜ், போராளியாகி, தளபதியாகி சிங்களப் படைகளுக்கு எதிராகத் தொடர் போராட்டங்களையே நடாத்தினார்.

எல்லாவற்றிக்கும் மேலாக் தளபதி பால்ராஜ் எந்த இராணுவ முகாமில் சிறை வைக்கப்பட்டாரோ அந்த இராணுவ முகாம் பின்னாளில் தளபதி பால்ராஜ் தலைமையில் தாக்கியழிக்கப்பட்டு வரலாற்றில் பதிவாகியது. ஒரு முன்னாள் கைதியின் எழுச்சி ஒரு இராணுவ முகாமின் அழிவாகிப் போனது.

**போரியல் புத்தகம்...!**

போராட்டம் வளர்ந்துவிட்டது. போர்க்கலையில் வல்ல



புலிகளாக போராளிகளும் வளர்ந்து விட்டார்கள்.

ஒரு கைத்துப்பாக்கியோடு ஆரம்பித்த விடுதலைப் போராட்டம் ஆட்லறிகளையும், டாங்கிகளையும் கொண்ட பெரும் படையாக உயர்ந்து நிற்கிறது.

காலமும்... சூழலும் மாற... மாற... போரும் அதன் தன்மைக்கேற்ப மாறிவிட்டது.

கெரில்லாப் போராட்டமாக ஆரம்பித்த விடுதலைப்போர் மரவுவழிப்படை நடத்தலை மேற்கொள்ளும் அளவுக்கு வளர்ந்தாயிற்று.

வெறும் சண்டைக்காரர்களாக மட்டுமல்ல அதிகாரிகளாக... தளபதிகளாக... சண்டைத்திறன் கொண்ட நிபுணர்களாக அவர்களை மாற்ற வேண்டும்.

தலைவர் இந்த விடயத்தில் எப்போதும் அதிக கரிசனை எடுப்பார். அவரே நேர்நின்று எல்லாவற்றையும் ஒழுங்குபடுத்துவார்.

நவீன கால போர் என்பது சாதாரண மானதல்ல அயுதங்களும் அதன் பயன்பாடுகளும் ஒருபுறம் இருக்க இன்னொரு புறம், தந்திரங்களும்... உத்திகளும் செல்வாக்குச் செலுத்தும். அயுதப்பயன்பாடு குறித்து அறிந்து கொள்ளும் வசதி, உத்திகளையும்... தந்திரங் களையும் அறிந்துகொள்ளக் கடைப்பதில்லை.

அது வெறுமனே எழுத்தில் வடிக்கப்பட்ட நூல் களிலிருந்து மட்டும், கற்றுத்தெரிந்து கொள்ள முடியாது.

ஒவ்வொரு போர் அனுபவமும்... தந்திரமும்... உத்தியும், அதன் தன் பௌதீகச் சூழலுக்கும் புவியல் அமைப்புக்கும் ஏற்ப மாறுபடும். தளபதிகளின் திறமைகளுக்கும் ஏற்ப வித்தியாசப்படும்.

இதற்கேற்ப போரியல் அறிவை வளர்த்தெடுத்து இளம்புலி வீரர்களுக்கு புகட்ட வேண்டும். தலைவர் இளம் வீரர்களுக்கான அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரி யொன்றை ஆரம்பித்திருந்தார். தகுதியானவர்களைக் கொண்டு, பல்துறை சார்ந்த போரியல் பாடங்களை அவர்களுக்கு ஊட்டினார்.

அங்கு உள்நாடு தொட்டு... வெளிநாடு வரையான போர்க்களங்களையும் போரியல் அனுபவங்களையும் கற்றுக்கொடுப்பதற்கு ஏற்பாடாகி இருந்தது. ஒருநாள் தலைவர் பிரிகேடியர் பால்ராஜ்யை அழைத்தார். அதிகாரிகள் பயிற்சிக்கல்லூரியில் கற்கும் போராளி களுக்குப் பாடம் புகட்டுமாறு பணித்ததார். ஆனால், ஒரு நிபந்தனையோடு...

நீ வெளிநாட்டுச் சண்டைகளைப் பற்றியொண்டும் அங்கு வகுப்பெடுக்க வேண்டாம். நீ... பிடித்த சண்டைகளைப் பற்றி மட்டும் சொல்லு அதுவே அவர்களுக்குப் பெரிய பாடம் என்றார். அந்தளவுக்குச் சண்டை அனுபவங்கள் நிரம்பிய ஒரு போரியல் புத்தகமாக எங்கள் தளபதி பிரிகேடியர் பால்ராஜ், தலைவரின் பார்வையில் மிளிர்ந்தார்.

**திசைக்காட்டி...!**

இந்திய - புலிகள் போரின் உக்கிரம். மணலாற்றுக் காட்டுக்குள் தீவிரம் பெற்றிருந்த காலம். தலைவரின் இருப்பிடத்தை அறிந்து கொண்டதில் இந்தியர்களுக்கு உற்சாகம். தமது சிறப்புப் படையணிகளை ஒன்றுதிரட்டி மணலாற்றுக் காட்டைச் சுற்றிவளைத்து தலைவரைக் கொன்றுவிடத் துடித்தனர்.

தலைவரை அழிக்கும் படை நடவடிக்கைக்கு அவர்கள் சூட்டிய பெயர்; “செக் மேற்” இந்தியர்கள் அந்தப் பெரும் நடவடிக்கையை மணலாற்றுக் காட்டுக்குள் மேற் கொண்ட போதும். தலைவர் அங்கிருந்து பின் வாங்கவோ இடம்மாறவோ விரும்பவில்லை. இந்திய - புலிகள் போரின் இறுதி முடிவை இந்த மணலாற்றுக் காட்டுக்குள் வைத்து தீர்மானிக்க அவர் விரும்பினார்.

வேட்டையாட வந்தவர்கள் அங்கே வேட்டை யாடப்பட்டார்கள். அது ஏறத்தாழ கோலியாத்துகளுக்கும்

தாவீதுகளுக்கு மிடையிலான யுத்தம். இந்த யுத்தம்



அரங்கேறிய இடமோ பெரும் வனாந்தரம்.

அக்காலம் காடு முழுவதுமாக போராளிகளின் உள்ளங்கைகளுக்குள் அகப்பட்டுவிடவில்லை. ஒருபுறம் இந்தியர்களோடு போராடிக்கொண்டு காட்டின் விசித்திரங்களையும் விடபடாத முடிச்சுகளையும் அவர்கள் அவிழ்க்க வேண்டியிருந்து. காடு எந்தச் சலனமுமற்று இருளால் மூடிக்கிடந்தது. எங்கோ கத்தித் தொலைக்கும் விசித்திரப் பறவைகள் எட்டுமுட்டாகச் சந்தித்தால் துள்ளிப் பறந்தோடும் காட்டு விலங்குகள், எவருக்கும் வளைந்து கொடுக்காது இறுமாப்போடு நிமிர்ந்து நிற்கும் காட்டு மரங்கள் எனக் காடு காடாக விருந்தது.

மனிதர்களுக்கு அந்நியப்பட்டு நிற்கும் இந்தக் காட்டுக்குள் தான் தமிழர்களின் தலைவிதியைத் தீர்மானிக்கும் ஒரு வல்லரசிற்கெதிரான போர் நடந்து கொண்டிருந்தது. உள்ளே தலைவர் இருக்கிறார் என்பதை அறிந்து கொண்ட இந்தியர்கள் பேராசை யோடு காட்டைச் சூழ்ந்தர்கள, காட்டுக்குள் குவிந்தார்கள்.

பெரும் வல்லரசு ஒன்றின் ஒருமுகப்படுத்தப்பட்ட படை அவர்களுக்கு எல்லா வளங்களும் இருந்தன. ஆனால் தலைவரின் தலைமையில் நின்ற போராளிகளுக்கு...? போராளிகளைப் பொறுத்த வரையில் காடு நண்பனாகவும் இருந்தது எதிரியாகவும் விளங்கியது. அது இயற்கையின் ஒரு விந்தையான படைப்பு.

ஆற்றல் உள்ளவர்களுக்கும் அனுபவம் கொண்டவர் களுக்கும் மட்டுமே வழிகாட்டும். அது எத்தனை ஆற்றல் படைத்தவர்களையும் அனுபவம் கொண்டவர்களையும் கூட சிலவேளைகளில் சறுக்கி விழுத்தி விடும்.

காட்டு அனுபவம் இல்லாது எடுத்து வைக்கும் ஒவ்வொரு காலடியும் காட்டுக்குள் நிறைந்து கிடக்கும் எதிரியிடமோ மாட்டிவிடும். அந்த வனத்தக்குள் அனாதையாய் அலையவிட்டு வேடிக்கை பார்த்து நிற்கும். அனுபவத்தின் மனக்குறிப்பைக் கண்களுக்குள் வரித்து காடு முறித்து பாதையெடுத்தால் மாத்திரம் தான் போராளிகளின் பயணங்கள் இலகுவாகும். மற்றும்படி பயணத்தை இலகுவாக்கப் பேராளிகளிடம் போதிய திசையறி கருவியும் கிடையாது வரைபடக் குறிப்பும் கிடையாது. இத்தனைக்கும் எதிரிகளின் சுற்றிவளைப்புக்குள்ளும் முற்றுகைக் குள்ளும், தொடரவேண்டிய பயணங்கள்.

அந்த நேரங்களில் சிசையறிகருவி இல்லாமலேயே காடுமுறித்து மனக்குறிப்பால் போராளிகளை அழைத்துச் செல்லும் காட்டனுபவம் உள்ளவர்கள் வேண்டும். ஆம் மணலாற்றுக் காட்டுக்குள் காட்டனுபவமும் - ஆற்றலும் - அறிவுமுள்ள பல திறமைசாலிகளை தலைவர் தன்வசம் வைத்திருந்தர். அத்தகைய திறமைசாலிகளில் ஒருவர் பிரிகேடியர் பால்ராஜ். அக்காலம் தளபதி பால்ராஜ் தலைவரின் நம்பிக்கைக்குரிய ஒரு திசையறிகருவி.

**முற்றுகை...!**

இந்திய அக்கிரமிப்புப் படைகள் வெளியேறியிருந்தன இல்லை வெளியேற்றப்பட்டிருந்தன. மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிய கதையாக சிங்களப் படைகள் தமிர் எடுத்து மண் பசியுடன் தமிழர்களை வேட்டையாட வெடித்தது இரண்டாம் கட்ட ஈழப்போர். விளைவு சிங்களப் படைகளிற்கு எதிரான போர் தீவிரம் பெறத் தொடங்கியது.

அந்தநேரம் கொக்காவில், மாங்குளம், முல்லைத்தீவு என பல இடங்களிலும் சிங்களப் படைகள் குந்தியிருந்தன. இவ்வாறு வன்னியை ஆக்கிரமித்து நின்ற சிங்கள படை முகாம்கள் எரிச்சலூட்டிக் கெண்டிருந்த அதேநேரம். அவர்களுக்கெதிராக பதுங்கித் தாக்குதல்கள்... கண்ணிவெடித் தாக்குதல் கள்... காவலரண்கள் தகர்ப்பு... மினிமுகாம்கள் கைப்பற்றல் என போரின் பரிமாணம் மாறத் தொடங்கியிருந்தது. ஈழப்போர் இரண்டாம் கட்டத் திற்குத் தாவியிருந்த அதேநேரம் இயக்கம் வளப்பற்றாக் குறைகள்... ஆளணிப் பிரச்சினைகளென இல்லாமைக ளோடு மோதியபடி தான் முன்னேறியது.

ஆயினும் நம்பிக்கையை முதலீடாக்கி, கொஞ்ச நஞ்சமாக இருந்த ஆயுத இருப்பைத் துணையாகக் கொண்டு பல சிங்களப் படைத் தளங்களை புலிவீரர்கள் ஒவ்வொன்றாக வீழ்த்தத் தொடங்கினர்.

முல்லைத்தீவில் நீண்ட நெடுநாட்களாக ஒரு இராணுவ முகாமை நிறுவி அந்த மக்களின் அன்றாடச் சீவியத்தில் மண்ணள்ளிக் கொட்டினர் சிங்களப் படைகள். எப்படியும் இந்த இராணுவ முகாமை தாக்கியழிக்க வேண்டும்.

இயக்கம் முடிவெடுத்து... வேவு எடுத்து... சின்ன ஒத்திகை பார்த்து... முன்னேறித் தாக்கத் தொடங்கிய போது இல்லாத அந்த வளப் பற்றாக்குறைகள் இயக்கத்திற்கு நெருக்கடியைக் கொடுத்தது.

முகாமைச் சுற்றிவளைத்து வீழும் என்ற நம்பிக்கை யோடு போராளிகள் தாக்கிய போதும் அது கைநழுவிப் போனது.

முகாமில் குந்தியிருந்த சிங்களப் படைகள் தாம் பலமாக அமைத்து வைத்திருந்த காவலரண்களுக்குள்ளும்... காப்பகழிகளுக்குள்ளுமிருந்து கடுமையாத் தாக்கினர். தாராளமாக வெடிபொருட்களைப் பயன்படுத்தி பலமாகத் தாக்கினர்.

போதாதற்கு முள்ளிவாய்க்கால் பக்கமாக் கடல் வழியாகப் படைகளைத் தரையிறக்கம் செய்ய நிலைமை கைமீறிப்போனது.

முகாம் மீதான தாக்குதலுக்கே பற்றாக்குறை என்கிற நிலையில்தான் வெடிபொருட்கள் இருந்தன. இந்த நிலையில் தரையிறக்கப்பட்டிருக்கும் படைகளுக்கு எதிரான சண்டைக்குத் தேவையான வெடி பொருட்களுக்கு எங்கே போவது?

இருந்த பலமும் வந்த பலமும் ஒன்றுசேர திரண்ட பலத்தோடு உக்கிரமாக மோதத் தொடங்கினான் எதிரி.

இந்தளவுக்கும் தாக்குதலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போராளிகளின் பல அணிகள் தளத்தின் முற்றத்திற்குள் கடுமையாக மோதிக் கொண்டிருந்தன.

இந்த நிலையில் தரையிறக்கப்பட்ட சிங்களப் படைகள் தாக்குதலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போராளிகளைச் சுற்றிவளைத்துவிட்ட நிலையில் அணிகளைப் பின்னிழுக்க வேண்டியதாயிற்று.

ஆனால் முகாமின் மையப்பகுதியில் மேஜர் றொபேட் தலைமையிலான அணியொன்று தாக்குதலில் ஈடுபட்டுக்கொண்டிருந்தது. அந்த அணி தாக்குதலை நிறுத்தி வெளியேற முயலகையில் அவர்களை தனது இறுக்கமான முற்றுகைக்குள் வளைத்துவிட்டான். தமது முகாமைத் தாக்க வந்த புலியணியொன்றை சுற்றிவளைத்தவிட்ட மகிழ்ச்சில் துள்ளிக் குதித்தன சிங்களப் படைகள்.

மீளமுடியாத நெருக்கடிக்குள் அணி திணறியது. உள்ளே நிற்பவர்கள் வெளியில் வரவேண்டுமானால் வெளியிலுள்ளவர்களின் உதவி தேவை. உள்ளே இருப்பவர்களால் முற்றுகையை உடைக்க முடியாத நிலை.

அப்படியாயின் முற்றுகையை உடைக்க யாரால் முடியும்? தொலைத்தொடர்புக் கருவி நம்பிக்கையோடு அழைத்தது.
லீமா...லீமா...
லீமா... லீமா... றொபேட்.
அழைத்த றொபேட்டின் குரலுக்கு தளபதி பால்ராஜ் குரல் கொடுத்தார்.

"அப்படியே சண்டை பிடிச்சுக் கொண்டிருங்கொ இப்ப வாறன்..." சொன்னதோடு நிற்கவில்லை அந்தத் தளபதி. நெருப்பு மழையில் நீந்தி முன்னேறி நெருக்கடிக்குள்ளாகிய அணியோடு சேர்ந்தபோது உடைந்து நொருங்கியது எதிரியின் முற்றுகை.

**ஓய்வறியாத் தளபதி...!**

பூநகரிப் படைத்தளம் மீதான தாக்குதல். புலிகள் இயக்கத்தின் அனைத்துப் படையணிகளும் ஒன்றிணைக்கப்பட்டு கடும் பயிற்சி நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டன.

போராளிகள்-தளபதிகள்-பொறுப்பாளர்கள் என எல்லோரும் ஒரு சேர உழைத்தனர். இரண்டாம் கட்ட ஈழப்போரில் புலிகள் இயக்கம் மேற்கொள்ளும் பாரிய படை நடவடிக்கை. ஆகாய கடல்வெளி படை நடவடிக்கையின் பின்னர் புலிகள் இயக்கத்தின் அனைத்து படையணிகளும் பங்கு கொள்ளப்போகும் ஒரு நடவடிக்கை பெரியளவில் மேற்கொள்ளப்படடும ஒரு ஈடூடகத்தாக்குதல்.

தளபதி பால்ராஜ் உட்பட அனைத்து தளபதிகளும், போராளிகளும் தளம் மீதான தாக்குதலுக்கான பயிற்சிகளிலும் ஒழுங்குபடுத்தல்களிலும் ஈடுபட்டுக்கொண்டிருக்க முந்திவிட்ட எதிரி - யாழ்தேவி படை நடவடிக்கையை ஆரம்பித்து விட்டான்.

ஆனையிறவிலிருந்து - கிளாலி நோக்கி எதிரியின் முன்னகர்வு யாழ்தேவி வேகமெடுக்க முதல் அதன் பயணப்பாதையிலேயே தடம்புரளச் செய்ய வேண்டும். அதுவும் பூநகரி படைத்தளம் மீதான தாக்குதல் ஏற்பாடுகளுக்கு எந்தப் பழுதும் ஏற்படாத வகையில் யாழ்தேவியை தடம்புரளச் செய்யவேண்டும்.

தலைவர் தளபதி பால்ராஜ் தலைமையில் படையணிகளை யாழ்தேவி களத்திற்கு அனுப்பி வைத்தார்.

படையணிகள் களத்திற்கு விரைய - யாழ்தேவி படை நடவடிக்கையை வழிநடத்திக் கொண்டிருந்த சிங்களத்தின் தளபதிகளுக்கு பிடித்தது அட்டமத்து சனியன் தளபதி பால்ராஜ் அவர்களும், தளபதி தீபன் அவர்களும் களச்சூழலுக்கு ஏற்ப ஒரு அதிரடி நடவடிக்கையை திட்டமிட்டனர்.

பரந்து கிடந்த அந்த மணல்பாங்கான பகுதியில் மணலைக் கிளறிப் போராளிகளை உள்ளே புதைத்து வேகமாக முன்னேறி வரும் பகைவன் நெருங்கி வந்தவுடன் மண்ணுக்குள்ளிருந்து கிளர்ந்தெழுந்து புயலெனத் தாக்க எதிரி ஆடிப்போனான்.

சண்டை வெகு கலாதியாக சூடுபிடிக்க எப்போதும் போல் கட்டளைப் பீடத்துள்ளிருந்து வழிநடத்தவேண்டிய தளபதி பால்ராஜ் சண்டை தொடங்கிய வேகத்தோடு போராளிகளோடு போராளிகளாக களத்தில் குதித்து விட டாங்கியிலிருந்து எதிரி ஏவிய ஒரு குண்டு வீழ்ந்து வெடித்ததில் தளபதி பால்ராஜ் விழுப்பண்ணடைந்து மருத்துவமனையில் கிடக்க வேண்டியதாயிற்று.

எவ்வேளையிலும் களத்தில் சுழன்றாட வேண்டும் என்ற எண்ணம் தளபதி பால்ராஜ்யிற்கு நோய்ப்படுக்கையில் கிடப்பதென்பது சாவு வேதனையாக இருந்தது. அதிலும் பூநகரி தளம் மீதான நடவடிக்கைக்கான தயார்ப் படுத்தல்கள் நடந்து கொண்டிருக்கும் நிலையில் ஓய்வாகக் கிடப்பதென்பது கடினமாக இருந்தது.

களத்தின் நினைவுகளோடு படுக்கையில் தளபதி பால்ராஜ் இரந்த ஒருநாள்பூநகரி தளம் மீதான தவளை நடவடிக் கையை ஆரம்பித்தார் தலைவர். போராளிகள் கடலாலும் - தரையாலும் உள்நுளைந்து தளத்தை வீழ்த்த மோதிக் கொண்டிருந்தனர். சண்டையின் போது பல இடங்களில் தடைகள் உடைந்தும் - உடையாமலும் உக்கிரமான சண்டை நடந்து கொண்டிருந்தது. நிலையில் தொலைத் தொடர்புக்கருவியில் இடையிலேயே தளபதி பால்ராஜ் அவர்களின் குரலும் வந்து... வந்து போனது.

வைத்தியசாலையில் படுக்கையில் கிடக்கும் தளபதி பால்ராஜ் எங்ஙனம் தொலைத் தொடர்புக்கருவியில் உரையாட முடியும். வைத்தியசாலையில் தொலைத் தொடர்புக் கருவி இல்லையோ. கேள்விகள் குழப்பத்தைத் தந்தன. தவளை நடவடிக்கையின் மையக்கட்டளைப் பீடத்தில் நிலைமைகளை அவதானித்துக் கொண்டிருந்த தலைவர் உசாரானார்.

தளபதி பால்ராஜ் வைத்தியசாலையில் இரகசியமாக ஏற்படுததிக்கொண்ட தொலைத் தொடர்புக் கருவியி னூடாகவே உரையாடுகின்றார் என்பதைப் புரிந்து கொண்டு உடனடியாகவே ஒரு போராளியை அங்கு அனுப்பி தாக்குதல் தொடர்பான களநிலைமையை உடனுக்குடன் தெரியப்படுத்த தான் ஏற்பாடு செய்யலாம் என்றும் வைத்தியசாலையிலிருந்து கொண்டு தொடர்பு கருவியில் உரையாடுவது பாதுகாப்பு இல்லையெனவும்



கூறித்தான் அந்த ஓய்வறியாத் தளபதியை ஓய்வெடுக்கச் செய்யவேண்டியிருந்தது.

[redacted]




# 'யாஸ்' சூறாவளி எச்சரிக்கை!

மே 24,

ஈழத்திவில் நிவும் தென் மேற்கு பருவப்பெயர்ச்சி காலம் நிலை மற்றும் அந்தமானுக்கு அருகில் தெற்கு மற்றும் மதியில் கிழக்கு வாங்காள விரிகுடாவில் தாழமுக்க நிலையால் உருவாகியுள்ள சூறாவளியால் தமிழீழப்பகுதிகளிலும் அனா்ந்த நிலைமைகள் ஏற்படலாம் என எதிா்வு கூறப்பட்டுள்ளது

வங்காள விரிகுடாவில் ஏற்பட்ட தாழமுக்கம் வலுப்பெற்று. சூறாவளியாக மாறியுள்ளது. இந்த சூறாவளிக்கு 'யாஸ்' என்று பெயரிடப்பட்டுள்ளது.

இது இனைறைய தினத்தில் வடமேற்கு திசையில் நகா்ந்து, இந்தியாவின் வடக்கு ஒடிசா மற்றும் வங்க தேச கரையை, 26ஆம் திகதி கடக்கலாம் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன் தாக்கம் ஈழப்பகுதியிலும் இருக்கும் என்று வளிமண்டலவியல் திணைக்களகம் குறிப்பிட்டுள்ளது. நாட்டை சூழவுள்ள கடல்பகுதி கொந்தளிப்பாக இருக்கும் என்பதுடன் நாட்டில் பல பிரதேசங்களில் பலத்த காற்றுடன் கூடிய மழை பெய்யலாம் என்று எதிா்வு கூறப்பட்டுள்ளது.




## இந்தியாவின் கறுப்பு பூஞ்சை அம்பாறையில் ஒரு வருக்கு தொற்று அறிகுறி



இந்தியாவின் அபாயகரமான கறுப்பு பூஞ்சை தொற்று நாட்டில் பரவுவதை தடுப்பதற்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நுண்ணுயிா் எதிா்ப்பு மருந்துகளை சேமித்து வைத்து, தயாா் நிலையில் இருக்கவேண்டுமேன அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் கருப்பு பூஞ்சை தொற்று அறிகுறியுடன் ஒருவா் இனங்காணப்பட்டுள்ளா். இத் தொற்றின் அதிகரிப்பானது, இறப்புக்களின் எண்ணிக்கையினையும் அதிகரிக்கக் கூடும்.

அதேவேளை அம்பாறை மாவட்டத்தில் கறுப்பு பூஞ்சை தொற்று பரவுவதாக வெளியிடப்பட்டுள்ள ஊடக செய்திகளில் எவ்வித உண்மையும் இல்லையெனவும் இவ்விடயம் தொடா்பாக அம்பாறை மாவட்டத்தில் பலருடன் கலந்துரையாடி தகவா் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் சங்கத்தின் செயற்குழு உறுப்பினா் பிரசாத் கொலம்பகே தெரிவித்துள்ளாா்

கொவிட் தொற்று மற்றும் ஏனைய வெவ்வேறு நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளவா்கள் கறுப்பு பூஞ்சை தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளனா். இவா்கள் 24 மணித்தியாலத்தில் நோயெதிா்ப்பு சக்தியினை இழக்கக்கூடும்.

கொவிட் தொற்றினால் பாதிக்கப்பட்ட பெரும்பாலான இந்தியா்கள் புற்று நோயால் பாதிக்கப்பட்டவா்கள் மற்றும் மாற்று சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப் பட்டவா்கள். இவா்களது உடலில் நோயெதிா்ப்பு சக்தி குறைவாகவே உள்ளது. எனவே உடலில் நோயெதிா்ப்பு சக்தி குறையுமாயின் பூஞ்சை தொற்றால் பாதிக்கப்படும் அபாயம் காணப் படுவதாகவும் தெரிவித்தள்ளாா்.

## மே 18 அன்று 'ஒப்பரேசன் முள்ளிவாய்க்கால் என்ற பெயரில் சிறீலங்கா இணையத்தளங்கள் மீது தாக்குதல்




மே 18ஆம் திகதி முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலை நாளை ஒட்டி 'ஒப்பரேசன் முள்ளிவாய்க்கல்' என்ற பெயரில் சிறீலங்கா சுகாதார அமைச்சு, இராஜரட்டை பல்கலைக்கழகம், சிறீலங் கா சீனத்துதரகம் உள்ளிட்ட இணையத் தளங்கள் மீது மே 18 ஆம் திகதி இணையவழி தாக்குதல் நடத்தப் பட்டுள்ளது.

தமிழீழம் சைபா் போா்ஸ் என்ற பெயரில் அமைப்பொன்றினால் சைபா் தாக்குதல் நடத்தப்பட்டதில் சிறீலங்காவின் பல இணையத் தளங்கள் முடங்கியுள்ளன.

இணையத்தளங்களில் ஊடுருவிய வா்கள் அந்த தளங்களில் முள்ளி வாய்க்கால் படுகொலை ஆதரங்களை படங்களாக பதிவேற்றியும் அதை நாம் மறக்க மாட்டோம் எனவும் பதிவிட் டுள்ளனா்.

இவ்வாறான தாக்குதல் தொடா்ச்சியாக நான்காவது ஆண்டாகவும் மே 18ஆம் திகதி இடம்பெற்றது.

இவ்வாறான மே 18 தொடா் தாக்குதல்களை அடுத்து இணைய தளங்கள் மீதான தாக்குதல்களைத் தடுக்க சிறீலங்கா அரசாங்கத்தால் விசேட இணைய பாதுகாப்பு பிரிவு ஒன்று உருவாக்கப்பட்டிருந்தது. எனினும் அதனை மீறி சிறீலங்காவின் பல இணையத்தளங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டு அவை செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளது.

மே 18ஆம் திகதி சிறீலங்கா நாட்டில் முக்கியமான இணையதள கட்டமைப்புக்களை இலக்குவைத்து தாக்குதல் நடத்தப்படலாம் என சிறீலங்கா தகவா் தொழில்நுட்ப சங்கம் எச்சரிக்கை விடுத்தது.

இந்து தாக்குதல்களுக்குப் பின்னால் தமிழீழம் இணைய வழி தாக்குதல் பிரிவு முன்னா் அடையாளம் காணப்பட்டிருந்ததாகவும் இலங்கை தகவல் தொழில்நுட்ப சங்கம் அந்த எச்சரிக்கையில் குிறப்பிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.




# 2010 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 492 தமிழ்ழீழ அகதிகளை கனடா நாட்டுக்கு சுமந்து வந்த சன் சீ. கப்பல் தனது இறுதிப்பயணத்தில்

எமது உறவுகளின் உயிரை காத்து சுமந்து வந்த எம். வி. சன்சீ கப்பலினை துண்டுகளாக பரிக்கும் வரலாற்று புகைப்படங்கள்






















# மட்டக்களப்பில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் ஈடுபட்டவர்கள் சிறிலங்கா பொலிஸ் படையல் கைது

மட்டக்களப்பு கல்குடா பொலிஸ் பிரிவிலுள்ள நாகர்வட்டை கடற்கரையில் முள்ளிவாய்க்காலில் உயிரிழந்தவர்களுக்கு கடந்த மே 18 ஆம் திகதி சுடர் வணக்கம் ஏற்றிய நிகழ்வு தொடர்பாக கைது செய் யப்பட்ட 10 பேரையும் எதிர்வரும் 14 நாட்கள் விளக் கமறியலில் வைக்குமாறு வெள்ளிக்கிழமை மே 21 வாழைச்சேனை நீதிமன்ற நீதவான் உத்தரவிட்டார்.

கடந்த மே 18 ஆம் திகதி சிறீலங்கா நீதிமன்ற தடை உத்தரவை மீறி கல்குடா பொலிஸ் பிரிவிலுள்ள நாகர்வட்டை கடற்கரையில் முள்ளிவாய்ய்காலில் உயிரிழந்த தமிழ் மக்களுக்கு நினைவுச்சுடர் ஏற்றி கடலில் பூக்கள் தூவிய வணக்கம் செலுத்திய அதனை படம் எடுத்து முகநூலில் பதிவு செய்த 10 பேரை பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் சிறீலங்கா பொலிசார் கைது செய்தனர்.

குறித்த நினைவேந்தல் நிகழ்வை தலைமைவகித்து செய்திருந்த திரு. லவக்குமார் என்பவருக்கு நீதிமன்ற தடை உத்தரவு பெறப்பட்டு அவருடைய வீட்டிற்கு மூன்று தடவைகள் சிறீலங்கா பொலிசார் சென்ற போது அவர் வீட்டில் இல்லாத நிலையில் அவரின் மனைவியார் அதனை பெறமாட்டேன் ன தெரிவித்த நிலையில் அவரின் வீட்டின் கதவில் அந்த நீதிமன்ற தடை உத்தரவை சிறீலங்கா பொலிசார் ஒட்டியுள்ளனர்.

இந்த நிலையில் நீதிமன்ற தடை உத்தரவு பெறப்பட்ட திரு. லவக்குமார், பத்து பேருடன் சென்று நாகர்வட்டை கடற்கரைளில் நினைவு கூறி இதனை படம் எடுத்து முகநூலில் பதிவேற்றம் செய்துள்ளனர்.

இதில் கைது செய்யப்பட்டவர்களை மூன்று நாள் சிறீலங்கா பொலிஸ் தடுப்பு காவலில் வைத்து விசாரணை மேற்கொள்ள நீதிமன்ற அனுமதியினை பெற்று தடுப்பு காவலில் வைத்து விசாரணை மேற்கொண்டு வந்த நிலையில் வாழைச்சேனை நீதவான் நீதிமன்ற நீதவான் முன்னிலையில் கொண்டுவரப்பட்டபோது அவர்களை மேலும் 13 நாட்கள் விளக்கமறியில் வைகுமாறு உத்தரவிட்டடர்.



# ஒன்ராறியோ அரசாங்கம் மூன்று படிநிலைகள் அடங்கிய திட்டமொன்றினை வெளியிட்டுள்ளது

ஒன்ராறியோ அரசாங்கம் மாநில முதன்மை சுகாதார அதிகாரியுடன் கலந்தாலோசித்ததன் அடிப்படையில் மாநிலத்தினை பாதுகாப்பான முறையில் மீளியங்கு நிலைக்குக் கொண்டுவருவதற்கான மூன்று படிநிலைகள்அடங்கிய திட்டமொன்றினை வெளியிட்டுள்ளது. இத்திட்டமானது மாநில அளவிலான தடுப்பூசி பெற்றுக்கொண்டவர்களின் விகிதாசாரம் மற்றும் பொது சுகாதார கட்டமைப்பினால் வழங்கப்படும் தரவுகளில் காணப்படும் முன்னேற்றநிலை போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்படும். மேற்படி தரவுகளின் அடிப்படையில், மே 22, 2021 முதல் ஒன்ராறியோ அரசாங்கம் மேலும் பல வெளியரங்க பொழுதுபோக்கு இடங்களை சில கட்டுப்பாடுகளுடன் திறப்பதற்கு அனுமதியளித்துள்ளது.

**மாநிலத்தை மீளியங்கு நிலைக்குக் கொண்டுவருவதற்கான இத்திட்டம் பொது சுகாதார விதிமுறைகளின் வழிகாட்டுதலுக்கமைய மூன்று படிநிலைகளைக் கொண்டதாக அமையும். அவையாவன:**

**முதற் படிநிலை:**
நோய்ப்பரம்பல் ஆபத்து குறைவாக இருக்கும் கூட்டநெரிசல் அற்ற வெளிப்புற செயற்பாடுகளையும் சில்லறை விற்பனைகளையும் சில கட்டுப் பாடுகளுடன் ஆரம்பிப்பதற்கு அனுமதி வழங்கல். இதில் வெளி யரங்குகளில் 10 பேர் வரை ஒன்று கூட அனுமதித்தல், வெளிப்புற உணவருந்தும் இடங்களில் ஒரு மேசைக்கு 4 பேர் வரை அமர்ந்து உணவருந்தஅனுமதித்தல், அத்தியாவசியமற்ற சில்லறை விற்பனை நிலையங்களில் அவற்றின் உள்ளடக்கத் திறனின் 15 வீதம் வரையான நபர்களை அனுமதித்தல் போன்றவை அடங்கும்.

**இரண்டாம் படிநிலை:**
வெளியரங்கில் ஒன்று கூடும் தொகையினை மேலும் அதிகரிப்பதுடன் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான மக்கள் முகக்கவசம் அணிந்தவாறு உள்ளரங்குகளில் ஒன்று கூடும் நிகழ்வுகளுக்கு அனுமதி வழங்குதல். இதன்படி, 25 பேர் வரையான வெளியரங்க ஒன்று கூடல்களுக்கு அனுமதியளித்தல், விளையாட்டுகள் மற்றும் போட்டி நிகழ்வுகள், இரவு வெளித்தங்கல் முகாங்கள், முகக்கவசம் அணிந்தவாறும் அதன் உள்ளடக்கத்திறன் விதிகளுக்கு அமையுமாறும் அழகு மற்றும் உடல்நலம் பேணும் நிலையங்களைத் திறக்க அனுமதித்தல், கட்டடத்தின் உள்ளடகத்தத் திறனின் 15 வீதம் வரையான மக்கள் ஒன்றுகூடுவதற்கு மத வழிபாடுகள், சடங்குகள், விழாக்களை அனுமதித்தல்.

**மூன்றாம் படிநிலை:**
கட்டுப்பாடுகளுடன்கூடிய அதே வேளையில், தொடர்ந்து முகக் கவசம் அணிந்திருக்க முடியாத, அதிகளவில் மக்கள் ஒன்றுகூடும் உள்ளக நிலையங்களை திறப்பதற்கு அனுமதித்தல். இதில் உள்ளரங்க விளையாட்டு, பொழுது போக்கு, உடற் பயிற்சி நிலையங்கள் அடங்கும். அத்துடன் உள்ளரங்க உணவகங்கள், அருங்காட்சியகங்கள், கலைக்கூடங்கள், நூலகங்கள், கேளிக்கை மற்றும் சூதாட்ட நிலையங்கள் அவற்றின் உள்ளடக்கத் திறனின் வரையறைக்கு ஏற்றவாறு அனுமதி வழங் கப்படும்.

ஒவ்வொரு படிநிலைகளும் 21 நாட் களைக் கொண்டதாகவும் மாநிலத் தினை அடுத்த படிநிலைக்கு நகர்த் துவதற்கான பொது சுகாதார தரவுகளை மதிப்பீடு செய்யும் காலமாகவும் அமையும். 21 நாட்களின் முடிவில் கிடைக்கப்பெறும் தரவு களின்படி குறிப்பிட்ட சதவீதமான மக்களுக்கு தடுப்பூசிகள் வழங்கப்பட்டு, பொது சுகாதார தரவுகளில் முன்னேற்றம் காணப்படும் பட்சத் தில் மாநிலம் அடுத்த படிநிலைக்கு நகர்த்தப்படும்.

**இதன்படி,**
முதற்படி நிலையில் பெரியவர்களில் 60 சதவீதம் வரையானோருக்கு முதலாவது சொட்டு தடுப்பூசி போடப்பட்டிருத்தல்,

இரண்டாம் படிநிலையில் பெரிய வர்களில் 70 சதவீதம் வரையான வர்களுக்கு முதலாவது சொட்டு தடுப்பூசியும், 20 சதவீதம் வரையானோருக்கு இரண்டாவது சொட்டு தடுப்பூசியும் போடப்பட்டிருத்தல்,

மூன்றாம் படிநிலையில் 70 முதல் 80 சதவீதம் வரையான பெரிய வர்களுக்கு முதலாவது சொட்டு தடுப்பூசியும், 25 சதவீதம் வரையா வனர்களுக்கு இரண்டாவது சொட்டு தடுப்பூசியும் போடப்பட்டிருத்தல்.

முழுமையாக மக்களுக்கு தடுப் பூசிகள் வழங்கப்பட்ட பின்னர் முகக்கவசம் அணிதல், சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றுதல், போன்றவற்றுக்கு ஒன்ராறியோ அரசாங்கம் தொடர்ந்தும் பொது சுகாதார விதிமுறைகள், ஒன்ராறியோ பொது சுகாதார கட்டமைப்பு மற்றும் ஏனைய சுகாதார நிபுணத்துவம் வாய்ந்த வல்லுனர்களின் வழி காட்டுதல்களின் அடிப் படையில் முடிவுகளை மேற்கொள்ளும்.

விஜய் தணிகாசலம், மாநில சட்ட மன்ற உறுப்பினர், ஸ்காபரோ - றூஜ் பார்க்.

## ஒன்ராறியோ, கியூபெக் மாநிலங்களில் மீள் திறக்கப்படவுள்ள திகதிகள்




Ontario and Quebec Reopening Comparison Infogram

# உலக செய்திகள்

## பாலஸ்தீனம் – இஸ்ரேல் 11 நாள் நடைபெற்ற போர் முடிவுக்கு வந்தது

மே 21, 2021




இஸ்ரேல் - பாலஸ்தீனம் இடையே கடந்த 11 நாட்களாக நடந்து வந்த போர் தற்போது முடிவிற்கு வந்துள்ளது.

இஸ்ரேல் - பாலஸ்தீனம் இடையே காஸாவில் மிக கடுமையான மோதல் கடந்த 11 நாட்களாக நடந்து வந்தது. ஹமாஸ், பாலஸ்தீன விடுதலை அமைப்பும் படையும், இஸ்ரேல் படையும் மாறி மாறி ஏவகளைண தாக்குதல் மற்றும் வான்வழி தாக்குதல்களில் ஈடுபட்டது.



பாலஸ்தினத்தில் அல் அக்சா மசூத்திக்குள் இஸ்ரேல் இராணுவம் தாக்குதல் நடத்தியதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக இஸ்ரேலுக்குள் காஸாவில் உள்ள ஹமாஸ் போர்ப்படை தாக்குதல் நடத்தியது. சிறிய ரக ராக்கெட்டுகளை கொண்டு ஹமாஸ் தாக்குதலை இஸ்ரேருக்குள் நடத்தியது.

இதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக இஸ்ரேல் காஸாவில் வான் வெளி தாக்குதல்களை மேற்கொண்டு வந்தது. இதுதான் போராக உருவெடுத்தது. கடந்த 11 நாட்கள் போரில் இஸ்ரேல் காஸாவில் தொடர்ந்து வான்வெளி தாக்குதல்களை மாறி மாறி நடத்தியது. இதில் 200கும் அதிகமான பாலஸ்தீனியர்கள் பலயானார்கள். 70க்கும் மேட்பட்ட குழந்தைகளும் அடங்கும். இதில் இஸ்ரேல் தரப்பில் 12 பேர் பலியானர்கள்.

60 ஆயிரம் பேர் தங்கள் வீடுகளை இழந்து, அகதிள் முகாம்களில் தாங்கும் நிலை ஏற்பட்டது. முக்கியமாக காஸாவில் உள்ள பெரிய கட்டிடங்கள், கொரோனா சோதனை மையங்கள், வணிக வாளகங்கள் என்று எல்லாம் வான்வழித் தாக்குதலில் நொறுக்கப்பட்டது. காஸாவில் ஹமாஸ் வடை இருக்கும் பகுதிகளை இஸ்ரேல் குறி வைத்து தாக்கி வந்தது. இதற்கு காஸாவில் இருந்து ஹமாஸ் படையும் பதில் ராக்கெட் தாக்குதலை நடத்தியது.

இஸ்ரேல் - பாலஸ்தீனம் இடையே கடந்த 11 நாடக்ளாக நடந்து வந்த போர் தற்போது முடிவிற்கு வந்துள்ளது. போர் நிறுத்தம் செய்யப்பட்டாலும் காஸா, இஸ்ரேல் படை இரண்டும் கவனமாக எல்லைகளை கண்காணித்து வருகிறது.

## காங்கோவில் எரிமலை வெடிப்பு தப்பிச்செல்லும் மக்கள்



மே 23

காங்கோ நாட்டில் பெரிய எரிமலை ஒன்று வெடித்ததால் ஆயிரக்கணக்கான மக்கள் தங்கள் இருப்பிடத்தை விட:ட தப்பிச் செல்ல முயற்சித்து வருகின்றனர்.

நியாயிராகாங்கோ என்னும் அந்த மலையிலிருந்து தீக்குழம்பு



பொங்கி வருவதில் வானம் விவந்து காணப்பட்டது.

இந்த எரிமலை வெடிப்பால் கோமா என்ற நகரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. அங்கு 20 இலட்சம் பேர் வசிக்கின்றனர்.

இதற்கு முன்பு இந்த எரிமலை 2002 ஆம் ஆண்டு வெடித்தது. அதில் 250 பேர் உயிரிழந்தனர் மேலும் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் போர் தங்கள் வீடுகளை இழந்துள்ளனர்.

## உலகின் மிகப்பெரிய பனிப்பறை உடைந்தது – அந்தாட்டிக்கா

உலகின் மிகப்பெரிய பனிப்பாறை அந்தாட்டிக்கா பனிப்பிரதேசத்திலிருந்து உடைந்து கடலில் மிதக்கத் தொடங்கியிருப்பதாக ஐரோப்பிய விண்வெளி ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அந்த மையம் வெளியிட்டுள்ள தகவல்படி 'ஏ-76' என்று பெயரிடப்பட்டள்ள அந்தப் பனிப்பாறை புது டெல்லியைவிட மூன்று மடங்கு பெரியது என்று தெரியவந்துள்ளது.

புது டெல்லியின் பரப்பளவு 1,1484 சதுர கிலோ மீட்டர்களாக உள்ள நிலையில், இந்தப் பனிப்பாறை சுமார் 4,320 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு
கொண்டதாகும்.

170 கி.மீ. நீளமும், 25 கி,மீ அகலமும் கொண்டுள்ள அந்தப் பனிப்பாறை தற்போது அந்தாட்டிக்கா பனிப் பிரதேசத்திலிருந்து உடைந்து அந்தப் பகுதியிலுள்ள வெடல் என் கடலில் மிதக்கத் தொடங்கியுள்ளது.

'ஏ-76' பனிப்பாறை அண்டார்டிகா பனிப் பிரதேசத்தின் 'ரோனி' என்ற பரப்பிலிருந்து பிரிந்து கடலில் மிதக்கத் தொடங்கியிருப்பதை பிரிட்டன் அந்தாட்டிக்கா ஆய்வு மையம் கண்டறிந்ததாகவும், அதை அமெரிக்காவின் தேசிய பனிப் பிரதேச மையம் உறுதி செய்துள்ளதாகவும் ஐரோப்பிய விண்வெளி ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ரோனி உள்பட பல்வேறு பனிப்பரப்புகள் இணைந்ததே அந்தாட்டிக்கா நிலப் பகுதியாகும்.

எனினும், பனிப் பாறைகள் இவ்வாறு உடைந்து கடலில் மிதக்கத் தொடங்குவது சுற்றுச்சூழல் ஆர்வலர்களிடையே கவலையை ஏற்படுத்தியுள்ளது. உலக வெப்பமயமாதலும், பருவநிலை மாறுபாடுமே இவற்றுக்குக் காரணம் என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.



# ஊரமிப்பு பொலநறுவை – மன்னம்பிட்டி கிராமத்தில் நடந்த உண்மைச் சம்பவம்

மன்னம்பிட்டி ஒரு சிறிய கிராமம். பொலநறுவை மாவட்டத்தின் எல்லையோடு அது அமைந்துள்ளது. பிரதான வீதியில் ஒரு பக்கம் சிங்களக் கிராமத்தையும்,



அடுத்த பக்கம் ஒரு முஸ்லிம் கிராமத்தையும் கொண்டிருந்த தமிழ் ஊர் அது. 1992 ஆம் ஆண்டின் துவக்கப் பகுதியில் ஓர் இரவு, சனங்கள் உறக்கினார்களோ இல்லையோ ஊர் பேச்சு மூச்சற்றுக் கிடந்தது. சிங்கள – முஸ்லிம் காடையர்களோடு இராணுவத்தினர் இரு பக்கங்களாலும் நுழைந்தனர். துப்பாக்கிகளை விட அவர்களுக்கு அதிகம் பிடித்தமான கத்திகள், வாள்கள், அலவாங்குகள், பொல்லுகள் கைகளில் கிடந்தன. நாய்களின் வெறித்தனமான குரைப்பு ஊரைத் துடித்தெழச் செய்தது.

அன்று நடந்த கோரத்தின் அதிர்ச்சியிலிருந்து இன்றும் மீளாத ஒரு சிறுவன், எரிந்து சாம்பலான அந்த இரவின் கதையைச் சொன்னான்.

தாய்மாரைக் கட்டிப்படித்தபடி ஆழ்ந்து தூங்கிய பச்சிளங் குழந்தைகளை, கால்களில் பிடித்து பிடிங்கி இழுத்தார்கள். பதறி எழுந்து “ஐயோ!...என் குழந்தை!” அன்னை சொல்லி முடிக்கமுன், வீறிட்டுக் கத்திய மழலையின் பிஞ்சு முகத்தைச் சுவரோடு ஓங்கி அறைந்து சிதறடித்து “இந்தா...பிடி...” எனத் தாயின் மடியில் எறிந்து விட்டுப் போனார்கள்.

கணவனை இழுத்து பெற்றோலைத் தலையில் ஊற்றித் தீப்பெட்டியைத் தட்டியபோது, “ஐயோ அவரை விடுங்கோ...” எனக் கதறியோடி வந்து கட்டிப்பிடித்த துணைவியையும் சேர்த்துக்கட்டி, “நீளும் அவரோடயே போ” என்று தீ மூட்டிய வெறியர்கள், மரண ஓலமிட்டு – துடித்துத் துடித்து மெல்ல அடங்கி கருகி முடியும் வரை கும்மாளமிட்டுச் சிரித்தார்கள். பயந்தொடுங்கி, பெற்றோருக்கிடையில் பதுங்கி ஒளித்த பெண் பிள்ளைகளை, வெளியில் இழுத்தார்கள், பெற்றவர்கள் நிற்கவே, உடைகளைக் கிழித்தெறிந்தார்கள். உடல் சோர்ந்து, உணர்வு சோர்ந்து, உயிர் சோர்ந்து சாகும் வரை அவர்கள் மீது காமவெறியாடிய காடையர் கூட்டம் – போகும்போது – பிள்ளைகளின் பிணத்தைத் தூக்கிப் பெற்றவர்களின் கையில் கொடுத்துவிட்டு, எக்காளச் சரிப்போடு வெளியேறியது.

மூன்று நாட்கள் நரவேட்டைக்குப் பிறகு வயல்கள், வீடுகள், குடிசைகள், ஆலயம், பாடசாலை என அந்தச் சின்னக் கிராமம் முற்றிலுமாகக் கருகிப் போய்க் கிடந்தது. மனித சஞ்சாரமே அன்று மன்னம்பிட்டி வெறிச்சோடிப் போயிருந்தது. வீதிகளில் இழுபட்ட பிணங்களை நாய்கள் நரிகளோடு, பறவைகளும் உணவாக்கின. துல்லியமான புள்ளிவிபரங்கள் இல்லையாயினும், கொல்லப்பட்டவர்களது தொகை 250 இற்கு அதிகம் என்பது பிழைக்காது. இத்தொகை 450 - 500 வரை கூட இருக்கலாம். 1,500 குடும்பங்கள் வரை வாழ்ந்த அந்தக் கிராமத்தின் அத்தனை குடிகளும் விரட்டியடிக்கப்பட்டன.

புாடசாலையின் தளபாடங்களை முஸ்லிம், சிங்கள அயல் கிராமங்கள் பங்கிட்டுக் கொண்டன. வீடுகளை உடைத்து



கதவுகள், சாளரங்கள், ஓடுகளைச் சேதாரமில்லாமல் கழற்றி, பத்திரமாக எடுத்து, பக்கத்துக் கிராம வீடுகளுக்காக வாகனங்கள் ஏற்றிச் சென்றன. மேனி உருக்கிச் சேனை செய்து எம்மக்கள் சேர்த்து வைத்த நெல் மூட்டைகள், உழவு இயந்திரத் தொடுப்பிகளில் அடுக்கி அப்புறப்படுத்தப்பட்டன. கொண்டு செல்ல வசதியற்று எஞ்சிய பொருட்கள் எல்லாம் நெருப்புக்குக் கொடுக்கப்பட்டன.

# சீனக் கிராமியக் கதை
# தொடரட்டும் போராட்டம் விடிவை நோக்கி!

நெடுங் காலத்திற்கு முன்னர், வடசைனாவில் வாழ்ந்து வந்தான் ஒரு முதியவன். வடக்கத்திய மலைகளின் மூடக் கிழவன் என அழைக்கப்பட்டான் அவன். அனது வீடு தெற்கு நோக்கியிருந்தது வீட்டின் வாசற்படிக்கு அப்பால் இரு மலைச் சிகரங்களிருந்தன. பாதையைத் தடை செய்தன.

அவன் தனது மக்களை அழைத்தான். அவர்கள் பற்றுறுதியுடன், மலைகளைத் தூர்க்கத் தொடங்கினர். மண்வெட்டி கொண்டு.

இதைக் கவனித்த, ஒரு கிழட்டு அதிமேதாவி, செருக்குடன் கூறினான், “முட்டாளே என்ன செய்கிறாம்? இப் பெரிய மலைகளை உன்னால் தூர்த்துவிட முடியுமா? என்ன? செயலில் நம்பிக்கை கொண்டு, முயற்சியில் இறங்கியிருந்த – மூடன் எனக் கருதப்பட்டவன் – முதியவன் சொன்னான்.

“இம் முயற்சியில் நான் இறந்தால் என் புதல்வர்கள் தொடருவர். அவர்களுக்குப் பின் எனது பேரக் குழந்தைகள், அவர்களாலும் முடியாவிட்டால் தலைமுறை, தலை முறையாக இம் முயற்சி தொடரும். சலிப்படையாத முயற்சி வெற்றியைத் தரும். எனவேதான் செயற்பாட்டில் இறங்கினோம்,” அதிமேதாவியின் வாய்ப்புலம்பலுக்கு செவிசாய்க்காது, தொடர்ந்தனர் வேலையை, அவ்விரு மலைகளும், அப்புறப்படுத்தப்பட்டன, பாதை திறக்கப்பட்டது.

# 1958 தமிழின படுகொலையின் ஆரம்பநாள் (22.05.1958)

தமிழினத்திற்கு எதிராக சிங்கள அரசுகள் செய்து வந்த திட்டமிட்ட நடவடிக்கைகள், இனப்படுகொலை என்ற கட்டத்திற்கு வந்தது 1958 ஆம் ஆண்டாகும். நுாற்றுக்கும் மேற்பட்ட தமிழர்ககள் சிங்கள காடையர்களாலும் அரசின் குண்டர்களாலும் சாகடிக்கப்பட்டபோது அப்பொதைய சிறீலங்கா பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா அதை மெளனமாக அங்கீகரித்திருந்ததர். இலங்கை, இனக்கலவரம், 1958 என்பது இலங்கையில் சிறுபாண்மையாக வாழும் தமிழருக்கு எதிராக நாடு 1948 இல் விடுதலை பெற்ற பின்னர் நட்த்தப்பட்ட முதலாவது நாடு தழுவிய வன்முறை இனக்கலவரம் ஆகம். இவ்வன்முறைகள் 1958 மே 22 முதல் மே 27 வரை இடம்பெற்றன. ஆனாலும், 1958 யூன் 01 இல் அவசரகாலச் சட்டம் அறிவிக்கப்பட்ட பின்னரும் ஆங்காங்கே வன்முறைகள் இடம்பெற்றன. இந்நிகழ்வு பொதுவாக இனக்கலவரம் என அழைக்கப்பட்டாலும், சில இடங்களில் இனவழிப்பாகவே நடத்தப்பட்டது. இவ்வழிப்பில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை கண்டெடுக்கப்பட்ட உடல்களின் எண்ணிக்கையைக் கொண்டு மதிப்பிடப்பட்டு 300 வரையென அறிவிக்கப்பட்டதுே.

**1958 இனவழிப்பு நிகழ்வுகள்**

**மே 22** - இனவழிப்பு ஆரம்பமானது. அடுத்த சில நாடகளில் நுாற்றுக்கணக்கான தமிழர்கள் சிங்களவர்களால் படுகொலை செய்யப்பட்டனர்.
**மே 22** - மட்டக்களப்பில் தொடருந்து ஒன்று தடம் புரண்டது.
**மே 24** - இலங்கியல் பொலன்னறுவை தொடருந்து நிலையத்தில் தொடருந்தில் வந்த தமிழ்ப் பயணிகள் தாக்கப்பட்டுக் கொல்லப்பட்டனர். பல இடங்களிலும் தமிழின அழிப்பு பரவியது.
**மே 27** - இலங்கைத் தமிழரசுக் கட்சி தடை செய்யப்பட்டது.
**மே 27** - இலங்கையின் தெற்கே பாணந்துரையில் சிங்ளக் காடையர்களால் சைவக்கோவில் ஒன்று எரிக்கப்பட்டு, கோவில் பூசகர் சுந்தரராஜக் குருக்கள் சித்திரவதை செய்யப்பட்டு உயிருடன் எரித்துக் கொல்லப்பட்டாா். இவரது 25 வயது இளம் மனைவியும் அவரது 4 வயதுக் குழந்தையும் பின்னா் அகதிகளாக யாழ்ப்பாணம் வந்தனா்.
**மே 28** - கல்கிசையில் தமிழருக்கு எதிராக வன்முறையில் ஈடுபட்ட ஆயிரத்திற்கும் அதிகமானோா் இராணுவத்தினரால் கலைக்கப்பட்டனா்.
**மே 28** - கல்கிசை, ஓட்டல் வீதியில் தமிழா் ஒருவா் உயிருடன் எரிக்கப்பட்டாா்.
**மே 29** - யாழ்ப்பாணத்தில் எந்த ஒரு சிங்களவரும் கொல்லப்படவில்லை என அங்கு பயணம் மேற்கொண்ட பாதுகாப்பு அமைச்சுக் செயலாளா் குணசேன டி சொய்சா பிரதமா் எஸ். டபிள்யூ. ஆா். டி. பண்டாரநாயக்கவிற்கு அறிவித்தாா்.
**மே 30** - இலங்கையின் தெற்கே இனசுத்திகரிப்பில் பாதிக்கப்பட்ட தமிழா்கள் அகதிகளாக கொழும்பு றோயல் கல்லூாி, புனித பீட்டா் கல்லூாி ஆகியவற்றில் தங்க வைக்கப்பட்டனா்.
**யூன் 01** - இனவழிப்பில் உள்ளன மக்கள் 4,397 தமிழ் அகதிகள் பப்பல் மூலம் காங்கேசன்துறைக்குக் கொண்டு செல்லப்பட்டனா்.
**யூன் 5** - இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 10 உறுப்பினா்கள் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டனா்.
**யூன் 06** - மேலும் 5,029 தமிழா் கப்பல் மூலம் யாழ்ப்பாணம் அனுப்பப்பட்டனா்.
“Emergency 58”என்ற நூல் தாா்சி வித்தாச்சி என்ற ஊடகவியலாளரல் இந்தக் இனவழிப்பை பற்றி எழுதப்பட்டது.

தமிழீழ விடுதலைப் போராட்ட ஆரம்ப காலகட்ட களச்செயற்பாட்டில் ஈடுபட்டிருந்த வேளை 05.06.1974 அன்று சிறீலங்கா காவல்துறையினால் சுற்றிவளைக்கப்பட்ட தருணத்தில் சயனைட் அருந்தி வீரச்சாவைத் தழுவிக்கொண்ட "முதற் தற்கொடையாளர்" ஈகையர் பொன். சிவகுமாரன் அவர்களின் 47ஆம் ஆண்டு நினைவு நாள். தமிழின ஒடுக்குமுறைக்கு சிங்களம் வித்திட்டு கல்வி தரப்படுத்தலை வீசியபொழுது அதை எதிர்த்து தமிழினப் புரட்சிக்கு வித்திட்ட மாவீரன்.







# யாழ் பொது நூலக எரிப்பு – 31.05.1981




ஈழத் தமிழனின் வாழ்வில் சிங்கள வெறியர்களால் 31.05.1981 அன்று யாழ் பொது நூலகம் எரியூட்டப்பட்டு ஆறாத வடுவின் 40ம் ஆண்டு நினைவுகள் தாங்கிய நாள் இன்றாகும்.

இலங்கையின் இனப்பிரச்சினையில் ஓர் முக்கிய நிகழ்வாக, விளைவுகளை உருவாக்கிய வன்முறையாக அமைந்த யாழ் பொது நூலகம் எரியூட்டப்பட்ட நாள் இன்றாகும்.

இந்நிகழ்வு 1981 ஆம் ஆண்டு மே 31 ஆம் திகதி நள்ளிரவுக்கு பின்னர் தென்கிழக்காசியாவின் மிகச் சிறந்த நூல் நிலையங்களில் ஒன்றாகக் கருதப் பட்ட யாழ்ப்பாண நூல் நிலையம் தீக்கிரையாக்கப் பட்டது.

**யாழ் நூலகம் :**
அழிக்கப்பட்ட அறிவுச் சுரங்கம்
தமிழர்களின் கலாச்சாரக் குறியீடுகளை அழிப்பது தமிழர்களை அழிப்பதைக் காட்டிலும் முக்கியமானது – சிங்கள இனவெறியர்களுக்குச் சொல்லித் தரப்பட்ட சித்தாந்தங்களுள் இதுவும் ஒன்று. அத்தகைய கலாச்சாரக் குறியீடுகளுள் ஒன்று யாழ்ப்பாணம் பொதுமக்கள் நூலகம். ஆசியாவின் மிகச்சிறந்த நூலகமாகக் கருதப்பட்ட நூலகம். ஈழத் தமிழர்களின் பெருமை, பெருமிதம், கௌரவம் என்று யாழ் நூலகத்தைச் சொல்லலாம்.

இன்னும் சொல்லப்போனால் ஈழத்தமிழர்களின் கல்வியறிவுக்கான ஆதாரப்புள்ளியாக அந்த நூலகத்தைத்தான் சுட்டிக்காட்டுவார்கள். அதுதான் சிங்கள இனவெறியர்களை உறுத்திக்கொண்டே இருந்தது. தமிழர்களின் முன்னேற்றத்துக்கு உத்வேகம் கொடுக்கின்ற அந்த நூலகத்தை என்றாவது ஒரு நாள் தடம் தெரியாமல் அழித்துவிட வேண்டும் என்று உள்ளுக்குள் வன்மம் வளர்த்துக் கொண்டிருந்தனர். தகுந்த நேரத்துக்காகக் காத்திருந்தனர்.

1981 ஆம் ஆண்டின் மே மாதம் யாழ்ப்பாணத்தில் மாவட்ட சபைத் தேர்தல்கள் அறிவிக்கப்பட்டிருந்தன. பிரசாரம் உச்சத்தில் இருந்தது. தேர்தல் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடுவதற்காக இலங்கையின் பல்வேறு பகுதிகளில் இருந்து சிங்களக் காவலர்கள் வந்திருந்தனர்.

31 மே 1981 அன்று தமிழர்களுக்கும் போலீஸாருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. அதில் சிங்கள காவலர் ஒருவர் மரணம் அடைந்தார். அவ்வளவுதான். எங்கிருந்து வந்தார்கள் என்று தெரியாது. எப்படி வந்தார்கள் என்று தெரியாது. கொத்துக் கொத்தாக வந்த சிங்களர்கள் தமிழர்கள் மீது ஆவேசத் தாக்குதலில் ஈடுபட்டனர். இங்கே சிங்களர்கள் என்றால் சிங்களக் காவலர்கள், ராணுவத்தினர், இன வெறியர்கள், வன்முறையாளர்கள் என்று அத்தனை பேரும் அடக்கம்.

முதலில் புத்தகக் கடைகளைக் குறிவைத்தனர். அடுத்தது, பத்திரிகை அலுவலகம். இலங்கையில் முதல் தமிழ்ப் பத்திரிகை என்ற பெருமைக்குரிய ஈழநாடு பத்திரிகை அலுவலகம் தீக்கிரையானது. யாழ்ப்பாணம் நாச்சியார் கோயிலுக்குத் தீவைத்தனர். நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரனின் வீட்டுக்குத் தீ வைக்கப்பட்டது. அவருடைய வாகனமும்

எரிக்கப்பட்டது. அக்கம்பக்கத்தின் தென்பட்ட தமிழர்களின் வீடுகள், கடைகள், வாகனங்கள் அனைத் தையும் நெருப்பு கொண்டு எரித்தனர். அதன்பிறகும் வெறி அடங்கவில்லை அவர்களுக்கு. அடுத்து எதை அழிப்பது என்று அலைந்த இனவெறியர்களின் கழுகுக் கண்களில் யாழ்ப்பாணம் பொதுமக்கள் நூலகம் சிக்கியது. உற்சாகமடைந்த இனவெறியர்கள் யாழ் நூலகத்துக்குள் நுழைந்தனர். தடுத்து நிறுத்திய காவலாளியை நெட்டித் தள்ளினர். கைவசம் கொண்டு வந்த பெட்ரோல் மற்றும் மண்ணெண்ணெய் கொண்டு நூலகத்தின் ஒவ்வொரு பகுதியாகப் பார்த்துப் பார்த்துத் தீவைத்தனர். பெட்ரோல் குண்டுகள் வீசப்பட் டதாகவும் சில சாட்சியங்கள் இருக்கின்றன.

நூலகத்தின் மேற்கு மூலை பகுதிதான் முதலில் எரியத் தொடங்கியது. அதன் தொடர்ச் சியாக நூலகத்தின் அடுத்தடுத்த பகுதிகளும் எரியத் தொடங்கின. நூலகம் எரிகிறது என்றால் புத் தகங்கள் எரிகின்றன என்று அர்த்தம். புத்தகங்கள் எரிகின்றன என்றால் தமிழர்களின் கலாச்சாரக் குறியீடுகள் எரிகின்றன என்று அர்த்தம். செய்தி கேள்விப்பட்ட தமிழர்கள் பதைபதைத்தனர்.
நூலகம் எரிந்துகொண்டிருக்கும் செய்தி மாநகரசபை ஆணையா ளர் சிவஞானத்துக்குக் கிடைத்தது. பதறித் துடித்த அவர், உடனடியாக தீயணைப்பு வீரர்களையும் மாநகர சபை ஊழியர்களையும் நூலகத் துக்கு அனுப்பினார். தீயை அணையுங்கள், ஆவணங்களைக் காப்பாற்றுங்கள் என்று உத்தரவிட் டார். அதன்படி நூலகத்தை நெருங் கிய தீயணைப்பு வீரர்களைத் தடுத்து நிறுத்தினர் சிங்கள காவலர்கள். மேலிடத்து உத்தரவு அவர்களை அப்படிச் செய்யவைத் திருந்தது.

நூலகத்தின் ஒவ்வொரு அங்கு லமும் அழிந்துகொண்டிருந்தது. நூலகத்துக்குள் சேமித்து வைக்கப் பட்டிருந்த 97000 நூல்கள் கருகிச் சிதைந்தன. மருத்துவம், இலக் கியம், ஜோதிடம் உள்ளிட்ட துறை களைச் சார்ந்த நூல்கள், ஓலைச் சுவடிகளில் எழுதப்பட்ட ஆவணங் கள் அனைத்தும் சாம்பலாகின. கலாநிதி ஆனந்த குமாரசுவாமி நூற்தொகுதி, சி. வன்னியசிங்கம் நூற்தொகுதி, ஐசாக் தம்பையா நூற்தொகுதி, கதிரவேற்பிள்ளை நூற்தொகுதி, அமெரிக்காவில் இருந்து நன்கொடையாக வந்திருந் த நூற்தொகுதிகள் ஆகியன அழிந் து போன பொக்கிஷங்களில் அதி முக்கியமானவை. யாழ் நூலகம் எரிக்கப்பட்ட செய்தி தமிழர்களை அதிர்ச்சியில் உறையச் செய்தது. செய்தியைக் கேள்விப்பட்ட பன் மொழிப் புலவர் தாவீது அடிகளார் அதிர்ச்சியில் மரணம் அடையும் அளவுக்கு இருந்தது யாழ் நூலக எரிப்பின் தாக்கம். நூலக எரிப்பை நேரடியாகப் பார்த்த பற்குணம் என்பவருக்கு மனநிலை பாதிக்கப் பட்டது. யாழ் நூலக எரிப்பு தமிழர்களின் மனத்தில் ஆற்ற முடியாத வடுக்களை ஏற்படுத்தி விட்டன. அந்த நூலகம் உருவான வரலாறு அப்படிப்பட்டது. மனித னுக்கு சுவாசிப்பது எத்தனை முக்கியமோ அத்தனை முக்கிய மானது வாசிப்பது என்பதில் ஈழத்தமிழர்கள் அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்டவர்கள். அதன் காரணமாகவே 1842 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் முதல் நூலகம் உருவாக்கப்பட்டது. அந்த நூலகம் பெரிய அளவில் வளர்ச்சி அடையா விட்டாலும்கூட புத்தகங்கள் வாசிப் பதில் தமிழர்களுக்கு ஆர்வம் குறைந்துவிடவில்லை. அதன் காரணமாகவே பெரிய நூலகம் ஒன்றை யாழ்ப்பாணத்தில் உரு வாக்க விரும்பினர்.

ஆர்வம் கொண்ட இளைஞர்களும் பொதுநல ஆர்வலர்களும் நூலகம் உருவாக்கும் பணியில் ஈடுபட்டனர். சிறிய அளவில் கட்டப்பட்ட அந்த நூலகம் மெல்ல மெல்ல வளர்ச்சி அடைந்தது. பொதுமக்களிடம் இருந்து திரட்டும் நிதியைக் கொண்டே நூலகக் கட்டடம் வளரத் தொடங்கியது. நூலகத்தை நிர்மா ணிக்கும் பணியில் இந்தியாவைச் சேர்ந்த கட்டடக் கலைஞர் நரசிம்மன் ஈடுபட்டார். அமைதி யான வாசிப்புக்குத் தேவையான அத்தனை வசதிகளுடனும் கூடிய யாழ்ப்பாணம் பொது மக்கள் நூலகம் 11 அக்டோபர் 1959 அன்று வாசிப்புக்குத் திறந்துவிடப்பட்டது.

உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் நூல்கள் வந்துசேர்ந்தன. புத்தக ஆர்வலர்கள் சேமித்துவைத் திருந்த புத்தகங்களும் பத்திரிகைப் பிரதிகளும் யாழ் நூலகத்துக்கு அன்பளிப்பாகத் தரப்பட்டன. அரிய நூல்களும் ஆவணங்களும் அங்கு பாதுகாக்கப்பட்டன. தமிழ் இளை ஞர்களின் வாசிப்புப் பழக்கத்தைத் தூண்டுவதற்கு யாழ் நூலகம் பேருதவி செய்தது.

ஏராளமான இளைஞர்கள் நூலகத் துக்கு வருவதை வழக்கமாக்கிக் கொண்டனர். பத்திரிகைகள் மற் றும் புத்தகங்கள் வாசிப்பது தமிழர் களின் தினசரி நடவடிக்கைகளுள் ஒன்றாக மாறிப்போனது யாழ் நூலகத்தின் வருகைக்குப் பிறகு தான். யாழ் நூலகத்தைப் பார்த்து பரவசம் அடைந்த தமிழ் இளைஞர் கள், அதேபோன்று இல்லாவிட் டாலும் சிறிய அளவிலான நூலகங் களையும் வாசக சாலைகளையும் தத்தமது பகுதிகளில் உருவாக்க ஆர்வம் செலுத்தினர்.

தமிழர்களின் வாசிப்பு ஆர்வமும் கல்வியறிவும் சிங்கள அரசாங்கத் துக்கு ஆத்திரத்தை வரவழைத்தன. தமிழர்கள் படிப்பதால்தான் சிந்திக் கிறார்கள். சிந்திப்பதால்தான் கேள் வி கேட்கிறார்கள். போராட்டத்தில் இறங்குகிறார்கள். உரிமைக்குரல் எழுப்புகிறார்கள். எல்லாவற்றுக் கும் காரணம் அவர்களுடைய கல்வி யறிவு. அதற்கு உந்துசக்தியாக இருப்பது அந்த யாழ் நூலகம். அதை அழித்துவிட்டால் தமிழர்களின் எதிர்காலத்தையே சீர்குலைத் துவிடமுடியும் என்று கணித்தனர்.

நூலகத்தை எரிக்கும் பொறுப்பு இரண்டு அமைச்சர்கள் வசம் ஒப்படைக்கப்பட்டது. சிறில் மேத்யூ மற்றும் காமினி திசநாயகா என்ற இரண்டு அமைச்சர்கள் களத்தில் இறங்கினார்கள். (பின்னாளில் அதிபரான ரணசிங்கே பிரேமதாசா கொடுத்த வாக்குமூலம் இது) கொழும்புவில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட சிங்கள வன்முறையாளர் களை யாழ்ப்பாணம் நகரத்துக்கு அழைத்துவந்து தங்கவைத்தனர். என்ன செய்வீர்கள் என்று தெரி யாது. யாழ் நூலகம் எரிக்கப்பட வேண்டும். இதுதான் அந்த வன் முறையாளர்களுக்கு அமைச்சர்கள் கொடுத்த உத்தரவு.

தகுந்த தருணத்துக்காகக் காத்துக் கொண்டிருந்தனர் வன்முறை யாளர்கள். அந்த நேரம் பார்த்து போலீஸாருக்கும் தமிழர்களுக்கும் மோதல் மூண்டது. இதுதான் சமயம் என்று மின்னல் வேகத்தில் களமிறங் கினர் வன்முறையாளர்கள். அமைச் சர் இட்ட உத்தரவை அப்படியே நிறைவேற்றி முடித்தனர்.

நூலகத்தை எரித்த நெருப்பு தமிழர் களின் நெஞ்சுக்குள் பரவியது. தங் களுடைய உரிமைக்குரலை உரத்து எழுப்பியது நூலக எரிப்புப் பிறகு என்றே சொல்லலாம். பாவத்துக்குப் பரிகாரம் தேடும் முயற்சியாக யாழ் நூலகத்தை மீண்டும் கட்டியிருக் கிறது சிங்கள அரசு. செங்கல். சிமெண்ட். மேசை. நாற்காலி. எல்லாம் புதிதாக வந்துவிட்டன, அழிந்துபோன அரிய ஆவணங் களைத் தவிர!

ஆக்கம்:- ஆர். முத்துக்குமார்.
மூலம் :- தமிழ் பேப்பர்.

[redacted]



# யாழ். நூலகம் – அழிக்கப்பட்ட தமிழர் அறிவுச் சுரங்கம்






# தமிழ் ஈழம்: நாட்டு எல்லைகள்




இரண்டாவது

**முன்னோர் வழிவழி வாழ்விடம்**

பழங்குடிகள் என அழைக்கப்படுவர், ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் பன்னெடுங்காலமாக வாழ்ந்து வருபவர். அந்த நிலப்பகுதி அக் குடிமக்களின் வாழ்வுக்கும் வளத்துக்கும் இன்றியமையாத அடிப்படையாக அமைகின்றது. இடம்பெயர் முயற்சிகள் காரணமாக வந்து, ஒரு நிலப்பகுதியில் வாழ்வைப் புதிதாகத் தொடங்குபவர்கள் வந்தேறு குடிகள் என அழைக்கப்படுகின்றார்கள்.

இந்தியத் துணைக்கண்டத்தின் பழங்குடிகள் திராவிடர் களே என்பது வரலாற்று ஆராய்ச்சியாளரின் துணிபு. வடக்கே இமயமலைத்தொடர்தொட்டு தெற்கே இலங்கைத் தீவு வரையில் உள்ள துணைக்கண்ட நிலப்பரப்பு, பண்டைக்காலத்தில் திராவிட இனமக்களின் உரிமைச் சொத்தாக அமைந்தது. இலங்கைத் தீவின் பழங்குடிகள் திராவிட இன மக்களே.

வடக்கே சிந்து ஆற்றங்கரையில் அகழ் வாராய்ச்சியாளர் களால் கண்டுபிடிக்கப்பட்ட மொகஞ்சதாரோ, அரப்பா நாகரிகம் நகர்சார் நாகரிகமாகும். இங்குத் திராவிட இன மக்கள் வாழ்ந்தார்கள் வளமுற்றார்கள். ஏறந்தாழ 5000 ஆண்டுகட்கு முன்பு செழித்த இந் நாகரிகம் ஆரியரின் படையெடுப்புகளால் தரை மட்டமாக்கப்பட்டது. நாடோடி களான ஆரியர்கள் நகர்சார் நாகரிகத்தினரான திராவிடரைத் தெற்குநோக்கி விரட்டினர்.

இலங்கைத் தீவு திராவிடரின் நிலப்பகுதி, ஏறத்தாழ 2500 ஆண்டுகட்கு முன்பு விசயனும் அவனுடைய கூட்டாளிக ளும் வடநாட்டிலிருந்து இலங்கைக்கு வந்தனர். அவர்கள் சிறது சிறதாக இலங்கைத் தீவின் நிலப்பகுதியை, அங்கு ஏற்கெனவே வாழ்ந்த திராவிட இன மக்களுடன் பங்குபோடத் தொடங்கினர்.

சிங்கள வரலாற்று நூலான மாவமிசத்தில் நாகர்கள் எனக் குறிப்பிடப்படுபவர்கள் ஆதி திராவிடர்கள் எனக் கருதப்படுகின்றார்கள்.

விசயன் இலங்கைக்கு வந்தபோது இலங்கையின் கரையோரத் தரவை நிலப் பகுதிகளில் நாகர்கள் வாழ்ந் தார்கள் என அந் நூல் கூறுகின்றது.

விசயன் பாண்டிய இளவரசியை மணம் செய்தான், பாண்டிய இளவரசி மாதோட்டத்துறையில் வந்திறங் கியபோது, மாதோட்டம் சிறந்த துறைமுகமாக விளங்கியதை வரலாற்று நூல் குறிப்பிடுகின்றன.

தமிழ் ஈழ நாட்டினத்தின் முன்னோர்களின் உரிமைச் சொத்தான இலங்கைத் தீவு முழுவதையும், சிங்கள நாட்டினத்தின் முன்னோடியாகக் கருதப்படும் விசயன், அவன் வழிவந்த மன்னர்கள், மக்கள் ஆகியோருடன் பங்கிட்டு, உரிமை கொண்டாட வேண்டியதாயிற்று.

**திராவிடச் சின்னங்கள்**

விசயனும் கூட்டாளிகளும் இத் தீவில் காலடி எடுத்து வைத்தபொழுது, தமிழர் தீவின் நிலப்பரப்பெங்கும் வாழ்ந்தனர்; வாழ்ந்தமைக்கு அடையாளமாகத் தமது பண்பாட்டுச் சின்னங்களை நிறுவியிருந்தனர். சிங்துவெளியில் உள்ள மொகஞ்சதாரோ, அரப்பா நாகரிக காலத்துக்கு முன்பிருந்தேந திராவிடர் இலிங்க வழிபாட்டுக்காரராக மீனைத் தமது சின்னமாகக் கொண்டவராக கலைஞர்கள், சிற்பிகள், கல்விமான்கள், தத்துவார்த்திகள், கோள்கணிதம் தெரிந்த அறிவியலாளர்களாக இருந்தனர்.

விசயன் இலங்கை வந்தடைந்த காலத்தில் திராவிடர் தமிழராக முகிழ்த்து இருந்தனர். ஈழத்திலும் தமிழ்நாட்டிலும் வாழ்ந்த தமிழர், சங்கம் அமைத்துத் தமிழ் வளர்த்தனர்; அறிவு பெருக்கினர்.

ஈழத்துப் பூதன்தேவனார் என்ற சங்கப் புலவர் ஈழநாட்டைச் சேர்ந்தவர். அகத்துறைப் பாடல்கள் பல பாடியுள்ளார் அவர். இவரின் பாடல்கள் சங்க இலக்கியத்தில் உள. அக நானூற்றில் மூன்றும் (88, 231, 307), குறுந்தொகையில் மூன்று (189, 343,360), நற்றிணையில் ஒன்றும் (366) ஆக ஏழு பாடல்கள் உள. ஈழநாட்டுத் தமிழனின் அக வாழ்வு நெறி இப் பாடல்களில் காணப்படுகின்றது.

விசயன் இலங்கைத் தீவில் காலடி எடுத்து வைத்த பொழுது, திராவிடரின் வழிபாட்டிடங்களாக இலிங்க வழிபாட் டிடங்கள் பல இருந்தன. காலத்தால் முற்பட்ட முன்னேசுவரம், கேது முனிவர் வழிபட்டதான திருக்கேதீச்சரம், திருக்கோணேச்சரம், மாமாங்கேசுவரம் ஆகியனவும் பிறவுமான ஈசுவரங்கள் இருந்தன. தமிழ் கடவுளான முருகனுக்கு மாணிக்கக் கங்கைக் கரையில் திருக்கோயில் அமைத்திருந்தனர். தென்துறை எனப் பெயர் பெற்ற தேவேந்திர முனையில் (Dendurai Dondra) மாபெரும் சந்திரமௌலீசுவரர் இருந்தது.

முன்னேசுவரமும் திருக்கேதீச்சரமும் மேற்குக் கரையில் உள்ளன. நகுலேசுவரம் வடக்குக் கரையில் உள்ளது, திருக்கோணேச்சுரம், மாமாங்கேசுவரம் இரண்டும் கிழக்குக் கரையில் உள்ளன. கதிர்காமமும், தேவந்திரமுனையிக் கோயிலும் தெற்குக் கரையில் உள்ளன. தீவின் நடுவே சிவனொளிபாத மலையில் சிவனாலயம் இருந்தது. அனுராதபுரத்தில் மாபெரும் ஈசுவரம் ஒன்றிருந்தது. இன்று அங்குள்ள அபயகிரி விகாரம் என்னும் பௌத்தக் கோயில், ஈசுவரன் கோயிலை அழித்து அதன்மேல் எழுப்பப்பட்டதாகும் என மலல்சேகர, அசிச்சந்திரா ஆகிய தற்கால வரலாற்று ஆசிரியர்கள் தமது நூல்களில் குறிப்பிட்டுள்ளனர்.

வழிபாட்டுச் சின்னங்களை ஆதாரமாகக் கொண்டு பார்த்தால், தீவின் கரையோரஙெங்கும் தமிழர் நெருங்கி வாழ்ந்தனர் என்பது வெளிப்படை. தமிழ்நாட்டில் உள்ள தமிழ் மக்களுடன் நெருங்கிய தொடர்பு உடையவர்களாக இருந்தார்கள்; மாதோட்டம், திருகோணமலை, தென் துறை போன்ற துறை முகங்களைப் பயன்படுத்தினார்கள். கிழக்கே சாவகத்தடனும் சீனத்துடனும், மேற்கே அராபியர்களுடனும் யவனர்களுடனும் வாணிகம் செய்தார்கள்.

**எல்லாளன் காலம் ( கி.மு. 161 –117)**

எல்லாளன் தமிழ் மன்னன்; அனுராதபுரத்தைத் தலை நகராகக் கொண்டு ஏறத்தாழ 2100 ஆண்டுகட்குமுன் இலங்கைத் தீவு முழுவதையும் ஆட்சி செய்தவன். எல்லாளன் காலத்தில் இலங்கைத் தீவின் மேற்கு, வடக்கு, கிழக்குக் கரையோரப் பகுதிகளும், அனுராதபுரத்தை நடுவணாகக் கொண்ட வன்னிப் பகுதியும் தமிழரின் வாழ்விடங்களாக இருந்தன. சிங்களவர் தெற்குப் பகுதியிலும் தென் மேற்குப் பகுதியிலும் செறிந்து வாழ்ந்தனர்.

எல்லாளனைத் தாக்கப் புறப்பட்ட சிங்கள அரசன் துட்டகைமுனு, முதலில் மாணிக்கக் கங்கைவரை உள்ள தமிழரின் கோட்டையைப் பேடித்தனமாகப் பெண்ணைக் கொடுத்துக் கைப்பற்றினான். தெற்கே மாணிக்கக் கங்கைவரை எல்லாளன் ஆட்சி பரவியிருந்தது.

**தாலமியும், தமிழர் வாழ்விடமும்**

ஏறத்தாழ 1800 ஆண்டுகட்கு (கி. பி. 140) முன்பு கிரேக்க நாட்டில் புவியியல் அறிஞர் தாலமி (Ptolemy) வாழ்ந்தார். இவர் உலகின் வரைபடத்தைத் தயாரித்தார். இன்று கிடைக்கக்கூடிய ஆகப் பழைய உலகின் வரை படம் தாலமியால் தயாரிக்கப்பட்டதாகும். உலகின் பல்வேறு பகுதிகளைத் தாலமி அதில் குறித்துக் காட்டியுள்ளார்.

இந்தியத் துணைக்கண்டத்தை விரித்து வரைந்து காட்டும் தாலமி, அதில் தமிழரின் வாழ்விடங்களைக் குறிப்பிட்டுக் காட்டியுள்ளார். தமிழர் நாடு "DAMIRIKE" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. திராவிட மொழிகளின் ஒப்பியல் இலக்கணம் எழுதிய அறிஞர் கால்டுவெல், தாலமியின் படைத்திலுள்ள தாமிரிக்கே என்னும் சொல், தமிழரின் நாட்டைக் குறிப்பதை விரிவாக எடுத்துக் கூறியுள்ளார்.

பாண்டிய அரசு, மதுரை போன்ற ஊர்கள் புகழ்பெற்ற வணிகத் துறைமுகங்களாகக் குறிப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளன. தமிழ்நாட்டின் கிழக்குக் கரை யோரத்தில் அந்நாளில் புகழ்பெற்றிருந்த வணிகத் துறை முகங்களுள் சாலியூர்த் துறைமுகம் புகழ்பெற்ற துறைமுகமாகக் கிரேக்க நாட்டில் பெயர் பெற்றிருந்தது.

தமிழ்நாட்டிற்குத் தெற்கேயுள்ள தீவாக இலங்கைத் தீவு தாலமியால் காட்டப்பட்டுள்ளது. இத் தீவிற்குச் சாலிகே (SALICE) எனப் பெயரிடப்பட்டது. சாலியூருக்கு எதிராக உள்ள தீவுக்குச் சாலிகே எனப் பெயரிட்டுத் தாலமி வழங்கியிருக்காலம். தாமிரபரணி ஆற்றுக்கு எதிர்ப்புறமாக உள்ள தீவு தாமிரபரணித் தீவு எனவும் தப்ரபேன் (TAPROBANE)எனவும் வழங்கப்படுதலையும் நோக்கவேண்டும்.

தாலமி காட்டியுள்ள இலங்கைப் படத்தில் (படம் 1) இடங்களின் பெயர்கள் நிறைய உண்டு. தாலமியின் படத்தை நோக்குவோர் இலங்கைத் தீவிலுள்ள பெரும்பாலான ஊர்ப் பெயர்கள் தமிழ்ப்பெயர்களாக — தமிழர் தம் வாழ்விடங்களை அழைக்கும் பெயர்களாக இருந்தமையைக் காண்பர்.

"மாதோட்டம் (Mudutti ) அந் நாள்களில் சிறந்த துறைமுகமாக — பொருள்கள் விற்க வாங்கப்படும் இடமாக விளங்கியது. வணிகர் நிறைந்த நகராமாக அது விளங்கிளது." தாலமியின் படத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

தீவின் நடுப்பகுதியில் மலைத்தொடர் காணப்படுகின்றது. இம் மலைத்தொடர் மலை "Malae" என்னும் பெயரால் தாலமியால் வழங்கப்படுகின்றது.

இம் மலைத்தொடரின் தெற்கு எல்லையில் ஒளிபாதம் "Oulipada" குறிப்பிடப்பட்டுள்ளது. சிவனொளிபாத மலையையே இது குறிக்கும்.

தேவேந்திரமுனையும் (Dagana) அங்குள்ள கோயிலும் குறித்துக் காட்டப்பட்டுள்ளன. சந்திரனுக்கு உரிய கோயிலாக (Sacra Luna) இக் கோயில் குறிக்கப்பட்டுள்ளது. சந்திர மௌலீசுவரர் கோயிலையே இது குறிக்கும்.

தாலமி வாழ்ந்த காலத்தில் தமிழர் தம் கரையோர நகரங்களைப் பட்டினம் என வழங்கினர். பட்டினம் (SPATANA) எனத் திருகோணமலையைத் தாலமி குறிப்பிடுகிறார்.

வடக்கே பருத்தித்துறை (Boreun Pram) காட்டப்பட்டுள்ளது. தெற்கே உரோகணம், கிழக்கே குமணை என்பனவும் தாலமியின் படத்தில் காட்டப்பட்டுள்ளன.

தாலிமியின் வரைபடத்தினை நோக்கினால், தமிழர் தீவின்

கரையோரங்களில் வாழ்ந்தமை, கோயில்கள் அமைத்தமை, சிவனொளிபாத மலையைப் போற்றி வழிபட்டமை நன்கு புலனாகும்.

**சைவ நாயன்மார் காலம்**

1300 ஆண்டுகட்கு முன்பு (கி.பி. 6, 7ஆம் நூற்றாண்டுகளில்) தமிழ்நாட்டில் சைவ சமய மறுமலர்ச்சி ஏற்படத் தொடங்கியது. சமண பௌத்த சமயங்கள் வழமையிலிருந்து மறையவும், வடமொழி பாலி போன்ற மொழிகளைத் தமிழ்நாட்டிலிருந்து போக்கவும் நாயன்மார் வழிசெய்தனர். திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார், சிறுத்தொண்ட நாயனார், அப்பூதி அடிகள் நாயனார் போன்ற நாயன்மார்களின் எழுச்சியால் தமிழ்நாட்டில் தமிழ்மொழி புத்துயிர் பெற்றது; சைவ சமயம் மறுமலர்ச்சி அடைந்தது.




படம் ஒன்று: தாலமியின் இலங்கைத் தீவு (கி.பி. 140) மலை MALEA எனவும், சிவனொளிபாத மலை ULIPADA எனவும், தேவேந்திரமுனையும் சந்திர மௌலீசுவரர் கோயிலும் DAGANA CIVITAS – SACRA LUNA எனவும், திருகோணமலை SPATABA PORTUS எனவும், மாதோட்டம் MUDUTTI எனவும், அது

இந்த நாயன்மாருட் சிலர், தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்ததுடன் இலங்கைத் தீவுக்கும் வந்தனர் இங்குள்ள கோயிலிகளில் வழிபாடாற்றினர் தேவாரப் பதிகங்கள் பாடினர். மாதோட்டத்தில் அமைந்துள்ள திருக்கேதீச்சரம், கிழக்கே அமைந்துள்ள திருக்கோணேச்சரம் ஆகிய இரு ஈசுவரங்கள் மீதும் பாடப்பெற்ற தேவாரப் பதிகங்கள் இன்றும் உள்ளன, ஏனைய ஈசுவரங்கள் மீதும் இவர்கள் தேவாரப் பதிகங்கள் பாடியிருக்காலம், எனினும், அவை இன்றுவரை கிடைக்கவில்லை.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார் இருவரும் திருக்கேதீச்சரம், திருக்கோணேச்சரம் ஆகிய திருக்கோயில்கள் மீது பாடிய மூன்று தேவாரப் பதிகங்களை இன்றுவரை கிடைக்கப் பெற்றுள்ளன. இக்காலங்களில் இந் நிலப்பகுதிகளில் தமிழர் வாழ்ந்தனர்; ஆலயங்களைப் பேணினர்; போற்றி வழிபாடாற்றினர் என்பதற்கு இவை சான்று.

**சோழர் காலம்**

ஏறத்தாழ 1000 ஆண்டுகட்கு முன்பு (10, 11 ஆம் நூற்றாண்டுகளில் ) சோழராட்சி இலங்கைத் தீவில் நிலைபெற்றது. துமிழ் நாட்டில் தஞ்சாவூரைத் தலைநகராக் கொண்டு ஆண்ட சோழமன்னர்களுட் மலையானவன் இராசஇராசசோழன். கி.பி. 995ல் இம் மன்னனின் படைகள் இலங்கையின் வடபகுதிகளைக் கைப்பற்றின, இராசஇராசசோழனின் மகனான இராசேந்திரசோழன் கி.பி. 1017ல் படைகளை அனுப்பினான். சயக்கொண்ட சோழ மூவேந்த வேளார் தலைமையில் வந்த படைகள் இலங்கை முழுவதையும் கைப்பற்றின. கி. பி. 1070 வரை சோழர்கள் இலங்கையை ஆட்சிசெய்தார்கள்.

சோழர் காலத்தில் தமிழர் தென்கிழக்காசியா முழுவதற்கும் சென்றமையால் வங்காள விரிகுடா சோழரின் குடா என அழைக்கப்பட்டது.

சனநாதமங்களம் என அன்று பெயர் கொண்ட இன்றைய பொலன்னறுவையைத் தலைநகராகக் கொண்டு மும்முடிச் சோழ மண்டமலம் எனப் பெயரிட்டு இலங்கையைச் சோழர்கள் ஆட்சிசெய்தார்கள்.

சோழர் காலத்தில் தமிழர் இலங்கைத் தீவில் செறிந்து வாழ்ந்தனர். பொலன்னறுவை, அனுராதபுரம் ஆகிய நகரங்களை நடுவணாகக் கொண்ட நிலப்பகுதி முழுவதிலும் தமிழர் வாழ்ந்தனர்.

பொலன்னறுவையில் சிவாலயங்கள் அமைக்கப்பட்டன. ஆவை பேணப்படுவதற்காக, மானியங்களாகப் பயிர்செய் நிலங்கள் வழங்கப்பட்டன. பாதுகாப்பாகத் தமிழர் குடியிருப்பு அமைக்கப்பட்டது. திருகோணமலையில் உள்ள திருக்கோகேணச்சரம் பேணப்பட்டது. இதையொட்டியும் நிலங்கள் மானியங்களாக வழங்கப்பட்டன. புதவியாக் குளத்தை ஒட்டிய நிலப்பகுதிகளில் தமிழர் குடியிருந்தனர். கிழக்குக் கரையோரமாக மாணிக்கக் கங்கை வரையுள்ள நிலப்பகுதி தமிழரின் நிலப்பகுதியாக இருந்தது.

மேற்குக் கரையோரத்தில் முத்துக் குளிப்பு நடைபெற்றது. நீர்கொழும்புக்கு வடக்கேயுள்ள கரையோரப் பகுதிகள் தமிழரின் நிலப்பகுதியாக இருந்தன.

வடக்கே வன்னிப்பகுதியும் யாழ்ப்பாணக் குடாநாடும் தமிழரின், வாழ்விடங்களாக இருந்தன. மாதோட்டத்தில் உள்ள திருக்கேதீசரத்துக்கு மானியங்கள் வழங்கப்பட்டன. ஆங்குள்ள நெடுஞ்சாலை ஒன்று இராச இராசப் பெருந்தெரு எனப் பெயர் கொண்டமை இன்றும் கல்வெட்டுச் சான்றாக உள்ளது.

சிங்கள மக்கள் தெற்கே உரோகணத்திலும் தென்மேற்குப் பகுதிகளிலும் வாழ்ந்தனர். எனினும் சிங்கள நாட்டிலும் கூடச்சந்தைகள், அலுவலகங்கள், ஆட்சி நிலையங்கள் அனைத்திலும் தமிழர் மலிந்து காணப்பட்டனர்.

**சோழர் காலத்துக்குப் பின்**

சோழராட்சிக்குப் பின்னர்ச் சிறிது காலம் பொலன்னறுவை சிங்கள மன்னர்களின் ஆட்சித் தலைநகராக இருந்தது. எனினும் காலஞ் செல்லச்செல்ல சிங்கள மன்னர்கள் தமது ஆட்சித் தலைநகரைத் தெற்குநோக்கி நகர்த்தினர். தம்பதெனியா, யாப்பாகுவா போன்ற தலைநகரங்கள் எழுந்தன.

எல்லாளன் காலத்தில் அனுராதபுரம் தலைநகராக இருந்தது. சிங்கள ஆட்சியாளரும் தொடர்ந்து அதனைத் தலைநகராகக் கொண்டனர். தமிழரின் படையெடுப்புகளால் சிங்களவரின் தலைநகரம் தெற்கு நோக்கி நகர்ந்தது. மகான் என்னும் கலிங்க அரசனின் படையெடுப்புக் காரணமாகத் தம்தெனியா, யாப்பாகுவா போன்ற தலைநகரங்கள் எழுந்தன.

மாகனின் ஆட்சி (கி.பி. 1215-1255), பாண்டியப் படைகளின் உதவியுடன் நடைபெற்ற ஆட்சியாகும்; பொலன்னறுவையைத் தலைநகராகக் கொண்ட ஆட்சியாகும். மாகனைத் தொடர்ந்து சந்திரபானு (கி.பி. 1255-1262) என்ற சாவக இளவரசன் இலங்கைத் தீவின் கரையோரப் பகுதிகளை – தமிழ்ப் பகுதிகளை – ஆட்சி செய்தான். மாகன், சந்திரபானு ஆகியோரின் ஆட்சிக் காலத்தில் தமிழரின் நிலப்பகுதி தனியாகவும், சிங்களவரின் நிலப்பகுதி தனியாகவும் ஆட்சி செய்யப்பட்டன. மேற்கு, வடக்கு, கிழக்குக் கரையோரப் பகுதிகள் தமிழரின் நிலப்பகுதிகளாக இருந்தன. நாட்டின் வடமத்திய, மத்திய, தென்மேற்கு, தெற்குப் பகுதிகள் சிங்கள நிலப்பகுதிகளாக இருந்தன. சிங்கள நிலப்பகுதிகளின் முதன்மையான ஊர்களில் கூடத் தமிழர் செறிந்து வாழ்ந்தமையைக் கி.பி. 14 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நிக்காய சங்கிரகம் என்னும் சிங்கள நூல் விளக்கிக் கூறும்.

**ஆரியச் சக்கரவர்த்திகள்**

எண்ணூறு ஆண்டுகட்கு முன் (கி.பி. 1282) இலங்கைத் தீவில் உள்ள தமிழரின் தனி ஆட்சி மீண்டும் எழுந்தது. யாழ்ப்பாணத்து நல்லூரைத் தலைநகராகக் கொண்டு எழுந்த மன்னர்கள் ஆரியச் சக்கரவர்த்திகள் என அழைக்கப்பட்டனர்

ஆரியச் சக்கரவர்த்திகளின் ஆட்சியில் தமிழ் ஈழ நிலப்பகுதி வரையறுக்கப்பட்ட எல்லைகளை உடையதாக இருந்தது. மேற்கே நீர்கொழும்புக்கு வடக்கேயுள்ள வாய்க்கால் ஆற்றில் (மாஓயா) இருந்து கரையோரமாக உள்ள நிலப்பகுதி தமிழ் ஈழ அரசின் ஆட்சியில் இருந்தது. சிலாபம், முன்னேச்சரம், குசலை, உடைப்பு, ஆனைமடு, புத்தளம்,

கற்பிட்டி, வண்ணாத்திவில்லு, குதிரைமலை, வில்பற்று, நானாட்டான், முசலி, மன்னார் வரையுள்ள மேற்குக் கரையோரப் பகுதியைத் தளமாகக் கொண்டு ஆரியச் சக்கரவர்த்திகள் முத்துக்குளிப்பு, சங்குக் குளிப்பு நடாத்தினர். தென்கடல் என வழங்கப்பட்ட மன்னார் வளைகுடாவில் கிழக்குப் பகுதியில் முத்துக்குளிக்கும் உரிமை ஆரியச் சக்கரவர்த்திகளுடையதாக இருந்தது.

தமிழ்நாட்டில் தூத்துக்குடிக் கரையில் இருந்த குருகுலச் சாதியைச் சேர்ந்த தமிழர் முத்துக்குளிப்புக்காகவும் கடற்றொழிலுக்காகவும் இலங்கையின் மேலைக் கரையோரங்களில் வந்து குடியேறினர். நீர்கொழும்பில் இன்றுள்ள பரதகுலத்தைச் சேர்ந்தவர்கள், இவ்வாறு குடியேறியவர்களின் வழித்தோன்றல்களே.

கி.பி. 1345 செப்டெம்பர் 21 ஆம் நாள் இபன் பற்றுற்றா என்ற பெரியார் இலங்கைத் தீவுக்கு வந்தார். மாலைத் தீவுகளிலிருந்து கப்பலில் கொழும்பை நோக்கிப் புறப்பட்ட அவர், காற்று வேகமாக வீசியதால் புத்தளக் கடற்கரையில் கரைசேர்ந்தார். முத்துக் குளிப்புத் தொழிலை நேரடியாக மேற் பார்வையிடுவதற்காக ஆரியச் சக்கரவர்த்தி புத்தளம் சென்று முகாமிட்டிருந்தார்.

எனவே, இபன் பற்றுற்றா ஆரியச் சக்கரவர்த்தியின் அனுமதிபெற்றுக் கரையேறியதோடு. மன்னரின் விருந்தினராகவும் தங்கினார். மன்னரின் உதவியுடன் சிவனொளிபாத மலை, தேவேந்திரமுனை ஆகிய இடங்களைப் பார்வையிட்டார். சிங்கள நாட்டிலிருந்து சைவக்கோயில்களுக்குத் தடையின்றிச் செல்லும் உரிமையை ஆரியச் சக்கரவர்த்திகள் பெற்றிருந்தனர்.

மீண்டும் இபன் பற்றுற்றா புத்தளம் வந்து அங்கிருந்து இந்தியாவிற்குச் சென்றார். ஆரியச் சக்கரவர்த்தி உயர்சாதி முத்துகளை இவருக்கு அன்பளிப்பாக கொடுத்ததுடன், பாரசீக மொழியில் இபன் பற்றுற்றாவுடன் கலந்துரையாடினார். இந்த விவரங்களை எல்லாம் இபன் பற்றுற்றா தமது பயண நூலில் விரிவாகக் குறிப்பிட்டுள்ளார். வாய்க்கால் ஆற்றிலிருந்து வடக்கேயுள்ள மேற்குக் கரையோரம் தமிழரின் நிலப்பகுதி என்பதற்கு வரலாற்றுச் சான்று வேறென்ன வேண்டும்? இன்றும் மேற்குக் கரையோர ஊர்களின் பெயர்கள் யாவும் தமிழிலேயே உள்ளன. ஆங்காங்கு பொட்டல் பொட்டலாகத் தமிழர் குடியிருப்புகளும் உள்ளன.

தேவேந்திரமுனைக்குச் சென்ற இபன் பற்றுற்றா அங்குள்ள இந்துக் கோயிலில் ஆயிரம் பிராமணர்கள் யாகபூசை நிகழ்த்தியதையும், ஐந்நூற்றுக்கு மேற்பட்ட தேவதாசிப் பெண்கள் இறைவனைத் துதித்துப்பாடி ஆடியதையும் கண்டார். அக்கோயிலின் விக்கிரகம் தங்கத்தால் ஆனது. தேவேந்திரமுனை நகரின் வருவாய் முழுவதும் அக்கோணிலுக்கு அர்ப்பணிக்கப்பட்டிருந்தது. இவற்றை இபன் பற்றுற்றா தமது பயண நூலில் குறிப்பிட்டுள்ளார்.

ஆரியச் சக்கரவர்த்திகள் தாம் ஆண்ட நிலப்பகுதிகளைப் பிரித்து, ஆட்சித் தலைவர்களை அமர்த்தினர், வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், தீவுப்பற்று, பச்சிலைப்பள்ளி, கரைதுறைப்பற்று, கரைச்சிக் குடியிருப்பு, பனங்காம வன்னிமை, முள்ளியவளை, கொட்டியாற்றுப் பற்று, பழுகாம வன்னிமை, பாணமை வன்னிமை எனவும் பிறவுமாகப் பல ஆட்சிப் பிரிவுகள் இருந்தன. இப் பிரிவுகளுட் சில மன்னனின் நேரடிக் கண்காணிப்பிலும், சில தன்னாட்சியுள்ள ஆட்சிப் பிரிவுகளாகவும் இருந்தன. வன்னி நாட்டில் உள்ள வன்னிமைகள் தன்னாட்சியுள்ள ஆட்சிப் பிரிவுகளாக இருந்தன.

ஆரியச் சக்கரவர்த்திகளின் ஆட்சியில் இருந்து பாணமை, பழுகாபம், கொட்டியாற்றுப் பற்று, பனங்காம வன்னிமை போன்றவை யாழ்ப்பாண அரசின் மேலாணையை ஏற்றிருந்த ஆட்சித் தலைவர்களால் ஆட்சி செய்யப்பட்டன.

கும்புக்கன் ஆறு, மாணிக்கக் கங்கை ஆகியவற்றைத் தென்மேற்கு எல்லையாகக் கொண்டதே பாணமை வன்னிமையாகும். கதிர்காமம், குமணை, உகந்தை, பொத்துவில், பாணமை, அம்பாறை ஆகிய இடங்களும் அயலும் இவ் வன்னிமையின் ஆதிக்கத்தில் இருந்தன.

மாவலி கங்கையை மேற்கெல்லையாகவும், வெருகல் ஆற்றை வடக்கெல்லையாகவும் கொண்டு அமைந்தது பழுகாம வன்னிமை. மட்டக்களப்பு வாவியைச் சுற்றிலும் உள்ள ஊர்களுடன் ஒமுனை, உகனை போன்ற இடங்களையும் இவ் வன்னிமை உள்ளடக்கியது. வேடர்கள் வதியும் விந்தனைப் பகுதியும் பழுகாம வன்னிமைக்கு உட்பட்டிருந்தது.

வெருகல் ஆற்றுக்கு வடக்கேயுள்ளதும், பறங்கி ஆற்றுக்குத் தெற்கேயுள்ளதும், சேருவிளை, மூதூர், தம்பலகாமம், திருகோணமலை, கந்தளாய், பதவியாக்குளம், பன்குளம், திறப்பனை, குச்சவெளி, நிலாவெளி ஆகிய இடங்களை உள்ளடக்கியதுமான வன்னிமைதான் கொட்டியாற்றுப் பற்று ஆட்சிப் பிரிவு. கொட்டியாற்றுக்குடா எனத் திருகோணமலைத் துறைமுகப் பகுதி வழங்கப்பட்டது.

மன்னாரை ஒட்டிய பகுதியை பனங்காம வன்னிமையின் ஆட்சியில் இருந்தன. முல்லைத்தீவை ஒட்டிய பகுதிகள் முள்ளியவளை வன்னிமையின் ஆட்சியில் இருந்தன.

ஆரியச் சக்கரவர்த்திகளின் ஆட்சியில் தீவின் வடக்கு, கிழக்கு, மேற்குக் கரையோர நிலப்பகுதிகள் தமிழ் ஈழ நிலப்பகுதிகளாக இருந்தன. 13 ஆம் நூற்றாண்டின் இறுதி தொட்டு 17 ஆம் நூற்றாண்டுத் தொடக்கம் வரை ஆரியச் சக்கரவர்த்திகள் நல்லூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிசெலுத்தினர். ஏறத்தாழ 500 ஆண்டுகட்கு முன்பு ஆரியச் சக்கரவர்த்திகளின் ஆட்சி குன்றத் தொடங்கிளது. மேலைநாட்டுக் கடலாடிகளாக முதலில் போர்த்துக்கேயர் வந்தனர். வணிகம் செய்ய வந்தவர்கள் நாடுகளைக் கைப்பற்ற முற்பட்டனர்.

போர்த்துக்கேயரின் வருகையால் நல்லூரைத் தலைநகராகக் கொண்ட தமிழ் ஈழ அரசின் வலிமை குன்றியது. கோட்டையைத் தலைநகராகக் கொண்ட கீழ்நாட்டுச் சிங்கள அரசு போர்த்துக்கேயரின் ஆட்சிக்குட்பட்டதும், கண்டியைத் தலைநகராகக் கொண்ட மலைநாட்டுச் சிங்கள அரசின் வணிக நடவடிக்கைகட்கு மேற்கு கரையோரத் துறைமுகங்கள் பயன் படாமற்போயின. எனவே, கண்டி அரசு கிழக்குக் கரையோரத் துறைமுகங்களைப் பயன் படுத்தத் தொடங்கியது. தமிழ் ஈழ அரசின் வலிமை குன்றியதால் கொட்டியாற்றுப் பற்று வன்னிமை, பழுகாம வன்னிமை, பாணமை வன்னிமை தமிழ் ஈழ மன்னர்களின் மேலாணையைவிட்டுக் கண்டி அரசின் மேலாணையையும் பாதுகாப்பையும் நாடின. எனினும் தன்னாட்சியுடைய தமிழ் நிலப்பகுதிகளாக அவை ஆட்சிசெய்யப்பட்டன.

**மூன்றாவது**

**மேலை நாட்டவரும் தமிழ் ஈழ நிலங்களும்**

**போர்த்துக்கேயர் காலம் கி.பி. 1619–1638**

போர்த்துக்கேய நாட்டைச் சேர்ந்த வாசுக்கொட காமா கி பி. 1495 ம் ஆண்டில் இந்திய துணைக் கண்டத்துக்கு வந்தார். இந்தியாவிற்குக் கடல் வழி வருகின்ற பாதையை இவர் தொடக்கி வைத்தார். இவரைத் தொடர்ந்து மேலை நாட்டவர்கள் இந்தியத் துணைக்கண்டத்திற்குப் பெருமளவில் வந்தனர்.

முதலில் போர்த்துக்கேயர்கள் வந்தனர். வாணி பத்தை நோக்கமாகக்கொண்டு வந்த இவர்கள் பின்னர் ஆட்சியுரிமைகளில் தலையிடத் தொடங்கினர். சிறிது காலத்தின் பின் நாடுகளின் அரசுரிமைகளையும் தமதாக்கிக் கொண்டனர்.

இலங்கைத் தீவுக்குப் போர்த்துக்கேயர் வந்த பொழுது, மூன்று அரசுகள் ஆட்சி செய்துகொண்டிருந்தன. யாழ்ப்பாணத்து நல்லூரைத் தலைநகராகக் கொண்ட தமிழ் ஈழ அரசு, கோட்டையைத் தலைநகராகக்கொண்ட கீழ்நாட்டுச் சிங்கள அரசு, கண்டியைத் தலை நகராகக்கொண்ட மலைநாட்டுச் சிங்கள அரசு என்பன அம் மூன்று அரசுகளாகும்.(தொடரும்...)

# லிபரேசன் ஒப்பரேசன் 34 ஆம் ஆண்டு நினைவுகள் (26.5.1987)

தமிழீழப் போராட்ட வரலாற்றில் தமிழ் மக்கள் மீதான முதல் பாரிய இராணுவ நடவடிக்கை இதுவாகும் சிறிய நிலப் பரப்பைக் கொண்ட வடமராட்சிப் பிரதேசத்தில் 8000 க்கு மேற்பட்டராணுவத்தினரால் நூற்றுக்கு மேற்பட்ட கனக ரக ராணுவ வாகனங்களும் பல உலங்கு வானூர்திகளும் ,குண்டு வீச்சு விமானங்களும் சிறிலங்கா கடற்படையினரின் கடல்படை படகுகளும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட கடற்படையினர் சுற்றிவளைத்து கோரத் தாக்குதல் நடத்தினார்கள் இதில் 800க்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டு நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள் படுகாயம் அடைந்தனர். 15000 க்கு மேற்பட்ட மக்கள் இருப்பிடங்களை விட்டு ஏதிலிகள் ஆக்கப்பட்டனர் இத்தாக்குதலை முறியடிப்பதற்காக தேசிய தலைவர் வே .பிரபாகரன் வழிகாட்டலில் 200 வரையிலான போராளிகள் பங்குபற்றியது குறிப்பிடத்தக்கது முதல் நாள் சமரில் 8 போராளிகள் வீரச்சாவடைந்தனர்.



























# தமிழீழ வரலாற்றில்
# தமிழீழ வைப்பகம் ஆரம்பிக்கப்பட்ட நாள் 23.05.1994




1994ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட தமிழீழ வங்கி முள்ளிவாய்க்காலின் இறுதி நாட்கள் வரையும் தமிழீழ மக்களுக்கான சேவையை வழங்கியது.

தமிழீழ விடுதலைப்புலிகள் ஒரு நடைமுறை அரசை உருவாக்கி அதில் முக்கிய பொருளாதார கூறாகிய வங்கியை நடத்தினர். அதற்க்கு தமிழீழ மக்களிடம் நல்ல ஆதரவு இருந்ததோடு மட்டுமல்லாமல் உலக ஊடகங்களும் அதைப்பற்றி எழுத தொடங்கின.

வங்கி ஆரம்பிக்கப்படும் போது யாழ்ப்பாணமே தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய நிர்வாக நகராக இருந்தது. பின்னர் வன்னி பெரு நிலப்பரப்பை நோக்கி நகரும் போது தமிழீழ வைப்பகமும் கிளிநொச்சியுக்கு நகர்ந்தது.

2005 A.F.P சர்வதேச செய்தி நிறுவனம் தமிழீழ வைப்பகம் பற்றி புகழாரம் சூட்டி இருந்தது. இது சர்வதேசம் புலிகளின் நடைமுறை அரசு மீது, குறிப்பாக புலிகள் சர்வதேச ரீதியாக இருந்த பொருளாதார சதிகளுக்குள் சிக்காமல் தம் நிதி நிருவாகங்களை வளர்த்தெடுத்து கொண்டு வந்ததை கண்டு பொறாமை பட்டது என்பதை சில சர்வதேச செய்திகள் அன்று எமக்கு உணர்த்தின.

### தமிழீழ வைப்பகத்தின் கிளைகள்

### கிளைகள் ஆரம்ப நாள்

யாழ்ப்பாணம் 23-05-1994
கிளிநொச்சி 05-06-1995
நெல்லியடி 14-09-1995
முல்லைத்தீவு 14-05-1996

### ஊரகக் கிளைகள் ஆரம்ப நாள்

மாங்குளம் 07-07-1997
விசுவமடு 01-06-2001
புளியங்குளம் 24-07-2002
பளை 14-03-2003
முழங்காவில் 14-01-2004



### பணிகள்

நிலையான வைப்புகள் Fixed Deposits
தேட்ட வைப்புகள் Savings Deposits
நடைமுறைக் கணக்குகள் Current Accounts
தேட்டச் சான்றிதழ்கள் Savings Certificates
ஏழு நாள் அழைப்பு வைப்புகள் Seven Days call Deposits
வெளிநாட்டு நாணய மாற்று Foreign Currency Exchange
கடன்கள் Loans
மேலதிக வரைவுகள் Over Drafts
நகையடைவு Pawn Broking
காசோலைக் கொள்வனவு Cheque Purchase Facilities
வாடகைக் கொள்வனவு Hire Purchase
நிலையான கட்டளைகள் Standing Orders
பொதி பாதுகாப்புப் பணி Packet Custody Service

### நிலையான வைப்புத்திட்டங்கள்
**Fixed Deposit Schemes**

### நிலையான வைப்புத்திட்டங்கள் வட்டி வீதம்

24 மாத நிலையான வைப்பு 08.50 %
12 மாத நிலையான வைப்பு 08.00 %
06 மாத நிலையான வைப்பு 07.00 %
03 மாத நிலையான வைப்பு 06.00 %
24 மாத நிலையான வைப்பு (மாத வட்டி) 08.00 %
12 மாத நிலையான வைப்பு (மாத வட்டி) 07.50 %

### வெளிநாட்டு நிலையான வைப்புத்திட்டங்கள்
**Foreign Fixed Deposit Schemes**

### நிலையான வைப்புத்திட்டங்கள் வட்டி வீதம்

24 மாத நிலையான வைப்பு 07.50 %
12 மாத நிலையான வைப்பு 07.00 %
24 மாத நிலையான வைப்பு (மாத வட்டி) 07.50 %
12 மாத நிலையான வைப்பு (மாத வட்டி) 07.00 %

### தாயகஒளி வதியாதோர் வெளிநாட்டு நிலையான வைப்புத்திட்டங்கள்
**THAYAKAOLI Non-Resident Foreign Fixed Deposit Schemes**

### நிலையான வைப்புத்திட்டங்கள் வட்டி வீதம்

24 மாத நிலையான வைப்பு 07.50 %
12 மாத நிலையான வைப்பு 07.00 %
24 மாத நிலையான வைப்பு (மாத வட்டி) 07.50 %
12 மாத நிலையான வைப்பு (மாத வட்டி) 07.00 %

### தேட்ட வைப்புத்திட்டங்கள்
**Savings Deposit Schemes**

### தேட்ட வைப்புத் திட்டங்கள் வட்டி வீதம்

வளர்ந்தோர் தேட்ட வைப்புத் திட்டம் 06.00 %
சிறுவர் தேட்ட வைப்புத் திட்டம் 06.50 %
நல்லைத் தேட்டம் 06.00 %
நல்லைச் சிறுவர் தேட்டம் 06.50 %
சிறார் உண்டியல் திட்டம் 06.50 %
ஊற்றுக்கண் பெண்கள் தேட்ட வைப்புத் திட்டம் 06.00 %
அமுதம் சிறார் தேட்டம் 06.50 %
பணியாளர் காப்பு நயநிதித் திட்டம் 06.50 %

### கடன் திட்டங்கள் Loan Schemes

### கடன் திட்டங்கள் வட்டி வீதம்

நகையடைவுக் கடன் திட்டம் 18.00 %
வாணிபக் கடன் திட்டம் 16.00 %
மேம்பாட்டுக் கடன் திட்டம்
வேளாண்மைக் கடன் திட்டம் 15.00 %
கடற்றொழில் கடன் திட்டம் 15.00 %
கைத்தொழில் கடன் திட்டம் 15.00 %
சுழற்சி முறையிலான வாணிபக் கடன் திட்டம் 23.00 %
சுயதொழில் முயற்சிக் கடன் திட்டம் 14.00 %
கதிரொளி மின்னாக்கித் தொகுதிக் கடன் திட்டம் 17.00 %




# பிரிகேடியர் பால்ராஜ்

பாலசேகரம் கந்தையா

கொக்குத்தொடுவாய் - முல்லைத்தீவு

(27.11.1965-20.05.2008)

மாரடைப்புக் காரணமாக 20.05.2008 அன்று சாவடைந்தார்.

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்

சங்கத்தமிழ்